இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

University of Jaffna Sri Lanka
RECEIVED
1990-6-8
Periodicals
Library

# தொழிலாளர் பாதை

விலை: 1/50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 392 ★ 1990 ஏப்ரல் 19 வியாழக்கிழமை

உலக தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!

★ நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவைக் கட்டியெழுப்பு!

★ உலக ஏகாதிபத்தியத்தையும் ஸ்டாலினிசத்தையும் தூக்கியெறி!

★ உலக சோஷலிச புரட்சிக்கு முன்னேறு!

மேதினக் கூட்டம்

கொழும்பு - சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்த, சரணர் தலைமையக மண்டபம்
(மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தின் பின்னால்)
புரட்சி கம்யூனிஸ்ட் கழகம்
நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கை கிளை.
இளம் சோஷலிஸ்ட்டுகள்.

## பதுளை கிளென் அல்பைன் தோட்ட படுகொலை:

# தொழிலாள வர்க்க சக்தியை சிதறடிக்கும் தாக்குதல்

**பதுளை கிளென் அல்பைன் தோட்ட தியனகலை டிவிசனில் ஆயுதப் படைகள் மேற்கொண்ட கொலைகார வேட்டையில் இரண்டு தோட்டத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஏப்ரல் 1 ம் திகதி இரவு 9.30 மணியளவில் 15 பேர் கொண்ட ஆயுதப் படைகள் கும்பலின் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் 9 பிள்ளைகளின் தந்தையான எஸ். மூக்கன் (48 வயது) எம். வேலாயுதன் (26 வயது) என்ற தொழிலாளிகள் உயிரிழந்துள்ளனர்.**

இச்சம்பவம் பற்றி சொல்லப்படுவதாவது:

ஏப்ரல் 10ம் திகதி இரவு9 30 மணிக்கு தோட்ட பக்டரியை காவலில் செய்யும் காவலாளியையும் தாண்டிச் சென்று வாகனத்தை நடுவழியில் நிறுத்தி விட்டு 15 — 17 இராணுவத்தினர் நவீன ஆயுதங்கள் சகிதம் குதித்தனர்.

மோகன் சுந்தரம், நடராஜ் என்னும் இருவரையும் கைது செய்வதே இவர்களின் நோக்கமாக இருந்ததாகக் கூறிக் கொள்ளப்பட்டது. முதலில் வேறுரு மோகனை கைது



எம். வேலாயுதன்

செய்து நிலத்தில் போட்டு உழக்கி வந்தனர். இச்சமயத்தில் தோட்டத்துக்கு அருகே உள்ள பாதையால் சென்றுகொண்டிருந்த மற்றுமோர் தொழிலாளியை பிடித்து அவருக்கு இராணுவ உடையணிவித்து நடராசாவைப் பிடிக்கப் புறப்பட்டனர்.

இச்சம்பவத்தைப் பார்வையிட வந்த நடராஜை கைது செய்து கட்டி இழுத்துச் சென்றனர். இச்சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட தொழிலாளர்கள், கோவில் மணியை ஒலித்து கூடினர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளவர்கள் கள்ளரா அல்லது இராணுவத்தினரா என சரியாக இனங்காணப்படாத நிலையில் மோகனையும் நடராஜையும் வீதியில் இழுத்துச் செல்பவர்கள் கள்ளர் கூட்டத்தினர் என தொழிலாளர்கள் எண்ணினர். இவ்வேளையில் தொழிலாளர்கள் தமது சுய பாதுகாப்புக்காக கல்வீச்சில் ஈடுபட்டனர்.

முதலில் வானத்தில் சுட்ட இராணுவத்தினர் பின்னர் கொலைகார துப்பாக்கிப் பிரயோகத்தில் இறங்கினர். இதில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினைச் சேர்ந்தவரும் 9 குழந்தைகளின் தந்தையுமான எஸ். மூக்கனும் (48 வயது) எம் வேலாயுதனும் (26 வயது) கொல்லப்பட்டனர் அததோடு பீ. செலன்பரன் (40 வயது) சே. செல்லம்மா (45 வயது) எம் விஜயகுமார் (22 வயது) படுகாயமடைந்தனர். பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இம் மூவரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அங்கத்தினர்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட சகல தொழிற்சங்கங்களின் துரோகத் தலைமைகளும் இந்த படுகொலைகளுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடு



எஸ். மூக்கன்

படாத போதிலும் தொழிலாளர்கள் தமது எதிர்ப்பைக் காட்டும் பொருட்டு ஏப்ரல் 11ம், 12ம், 13ம் திகதிகளில் தன்னியல்பாக முன்வந்து வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

தொழிற்சங்கத் தலைவர்கள், எதிர்வரும் மே 6ம் திகதி துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமான விசாரணைக்கு இராணுவ தலைமை அலுவலகத்துக்கு வரும்படி இராணுவத்தினரால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று சகல நடவடிக்கைகளையும் கைவிட்டுள்ளனர்.

யூ. என். பி. அரசாங்கம் தொழிலாள வர்க்கத்துக்கு, சிறப்பாக தோட்டத் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக மேற்கொண்டுள்ள இந்த கொலைகாரத் தாக்குதல் யூ. என். பி அரசாங்கத்தின் பலத்தினையன்றி முழு அளவிலான பலவீனத்தையும், நெருக்கடியையும் மீண்டும் ஒரு தடவை வெளிக் கொணர்ந்துள்ளது.

இ. தொ. கா. தொண்டமான் தலைமை இக்கொலைகார அரசாங்கத்தின் பங்காளியாக கலந்துறவாடுவதோடு இ. தொ கா. காங்கிரஸ்களை வ்வரசின் அமைச்சர்களுக்கு விழா வெடுக்கும் மகாநாடுகளாக திருப்பி வரும் நிலையில் இக்கொலைகாரக் கும்பல்கள் தோட்டங்களுள் பாய்ந்து விழுந்துள்ளன.

இ. தொ. கா.வின் சமீபத்திய ஹற்றன் மகாநாட்டில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தினர்களால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் இந்த ஆபத்தினை முன்கூட்டியே சுட்டிக்காட்டியது: "இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் இந்த மகாநாடு தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமன்றி முழுத் தொழிலாள வர்க்கமும் ஏகாதிபத்திய வங்கி, சர்வதேச நாணய அமைப்புக்களின் கொலைகாரத் தாக்குதல்களில் இருந்து தமது தொழில், சேவை, தொழிற்சங்க அடிப்படை உரிமைகளைக் காத்து உறுதியான போராட்ட தீர்மானங்கள் எடுக்க வேண்டிய மிகவும் தீர்க்கமான காலகட்டத்தில் இடம் பெறுகின்றது.

"ஆதலால் இந்தக் காங்கிரசினை அதற்கான ஒரு போராட்ட தயாரிப்புக் காங்கிரசாக பாவிக்கும் செய்யும் படியும் தலைமைகள் முதலாளி வர்க்கத்துடனும், யூ. என். பி. அரசாங்கத்துடனும் கொண்டுள்ள எதிர்ப்புரட்சி உறவுகள் அத்தனையையும் ஒரு முடிவுக்குக் கொணரும்படியும் தொழிலாள வர்க்கத்தின் ஏனைய பிரிவினருடனான ஐக்கியத்தினை வலுப்படுத்தும் பொருட்டு தொழிலாள வர்க்க ஐக்கிய முன்னணிக்கு முன் நின்று போராடுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தோட்டத் தொழிலாளர்களை வேண்டுகின்றது."

இதற்கான வேலைத்திட்டமாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதே துண்டுப்பிரசுரத்தில் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளடங்கலாக முழுத் தொழிலாளர் இயக்கத்தினையும் காக்கும் நடைமுறை நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அனைத்து தொழிலாளர் அமைப்புக்களையும் கொண்ட ஐக்கிய முன்னணியைக் கட்டி எழுப்பவும் (ஆ) உலக வங்கி—யூ என் பி தாக்குதல்களுக்கு எதிராக பொது வேலை நிறுத்தத்தினை ஒழுங்கு செய்யவும் தொழிற்படவேண்டும் என தோட்டத் தொழிலாளர்களும், தொழிலாள வர்க்கத்தின் ஏனைய பிரிவினரும் நெருக்க வேண்டும் எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டிக் கொள்கின்றது.' எனக் குறிப்பிட்டது.

இந்த தியனகலை டிவிசன் துப்பாக்கிப் பிரயோகம் நாம் மேலே சுட்டிக் காட்டிய உலக வங்கி—சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்ப்புரட்சி வேலைத்திட்டங்களின் ஒரு பாகமாகவே இடம் பெற்றுள்ளது.

★ நஷ்டத்தில் இயங்கும் தோட்டங்களை மூடுதல். தோட்டத் தொழிலாளர்களால் சரி அரைவாசியானவரை வேலை நீக்கம் செய்தல் ★ சம்பளங்களை வெட்டுதல் ★ வேலையை துரிதப்படுத்தல் என்பன ஏகாதிபத்திய வங்கிகளின் திட்டங்களில் முக்கியமானவை.

இத்திட்டத்தினை அமுல்செய்யும் யூ. என. பி. அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினை முன்

(8-ம் பக்கம் பார்க்க)

**வட — கிழக்கில் இருந்து ஆயுதப்படைகளை அகற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய படைகளை வாபஸ் வாங்கி

# புதிய இராணுவ பயங்கரத்துக்கு தயாரிப்பு

ஏப்ரல் 11ம் திகதி பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் யூ. என். பி. அரசின் பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதுதலும், பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப் பொலிசாரை அங்கிருந்து வெளியேற்றி அவர்களின் இடத்துக்கு 48 மணித்தியாலங்களுள் புதிய பொலிசாரைத் தருவிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைக்கும், யூ. என். பி. அரசாங்கத்துக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடும் தமிழீழ விடுதலைப் போராட்டம் முகம் கொடுத்துள்ள புதிய பேராபத்தினைச் சமிக்கை காட்டுகின்றது.

இந்நாட்களில் ராஜீவ் காந்தியினதும் மற்றும் துரோகிகளதும் கொடும்பாவிகளை இழுத்து, தீமூட்டுவதில் ஆர்வமும் அக்கறையும் காட்டிய ஒடுக்கப்படும் தமிழ் மக்களும், போராளிகளும் சிங்கள இனவாத அரசின் கொடும்பாவிகளை இழுத்து தீமூட்டுவதை ஒத்திப் போடுவது உயிராபத்தானது என்பதை இந்த பருத்தித்துறைச் சம்பவம் அடித்துக் கூறியுள்ளது.

6 00க்கும் அதிகமான பொது மக்களையும் 600 போராளிகளையும் பலி கொண்டதோடு வீடுகளையும், சொத்துக்களையும் பேரழிவுக்குள்ளாக்கிய போதிலும் உலகின் நான்காவது பெரும் இராணுவம் தான் விரும்பிய தீர்வினை வட–கிழ்மாகாண ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் மீது சுமத்துவதில் வெற்றி கண்டுவிடவில்லை. இதனை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் 'சன்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டார்; இலங்கையினதும் இந்தியாவினதும் மூலதிட்டம் உண்மையில் இடம் பெற்றதிலிருந்து வேறுபட்டது எல்லாமே பிழைத்துவிட்டன. அவர்களின் சகல திட்டங்களும் சரிந்து போய்விட்டன. 'இன்றைய நிலைமை அதன் வெளிப்பாடேயாகும்'' (ஏப்ரல் 8)

இந்த இந்திய, இலங்கை இராணுவம் பற்றிய அனுபவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் மேலும் கூறியதாவது: ''எமது மக்களை இலங்கை இராணுவம் பாதுகாக்கும் என்று நாம் நம்பிக்கை கொள்ள முடியாது. இலங்கை இராணுவத்தையும் இந்திய சமாதானப் படையையும் நாம் நம்பியதால் 25000 மக்கள் கொல்லப்பட்டனர்.''

1987 ஜூலை ஒப்பந்தம் வரை விடுதலைப் புலிகள் கடைப்பிடித்த புரட்சிகர விடுதலை யுத்தம் கைவிடப்பட்டதோடு இந்தக் கொலையாளிகளின் குகைகளின் உள்ளும் வெளியிலும் சமாதான'பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. 1947ல் இலங்கையில் முதலாளித்துவ அரசு தாபிக்கப்பட்டதில் இருந்து இலங்கையில் பூர்த்தி செய்யப்படாத ஜனநாயகப் புரட்சியின் எந்தவொரு பணியையும் இட்டு நிரப்ப யூ. என். பி–ஸ்ரீல. சு. க. முதலாளித்துவக் கட்சிகள் தவறியதோடு அவ்வுரிமைப் போராட்டங்களுக்கு எதிராக இரத்தக் களரிகளை ஏற்படுத்தின. நான்கு தசாப்தங்களுக்கு மேலான இந்நாட்டின் பிற்போக்கு முதலாளித்துவ அரசியல் களத்தில் வளர்ந்து, போஷித்து, தலைமைக்கு வந்தவரே இன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாச.

அத்தோடு இலங்கையின் 'தேசிய' முதலாளி வர்க்கம் இந்நாட்டுத் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகக் கொணர்ந்த இந்தோ—பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம் முதல் தனிச் சிங்கள சட்டம், குடியரசுச் சட்டம், இந்திய—இலங்கை ஒப்பந்தம் வரையிலான அனைத்தும் ஏகாதிபத்தியவாதிகளின் அனுமதியுடனும், அங்கீகாரத்துடனுமே இடம் பெற்றன. இந்திய–இலங்கை உடன்படிக்கை அமெரிக்க தென்ஆசிய வெளிநாட்டுக் கொள்கை கமிட்டித் தலைவரான ஸ்ரீபன் சொலார்சின் கண்காணிப்பின் கீழேயே இடம் பெற்றது என்பது இதற்கு நல்லதோர் சான்று.

ஆதலால் இங்கு அனைத்துலக அரசியல் அரங்கின் முக்கிய வர்க்க சக்திகளையும் அவற்றின் ஆதிக்கத்தையும் கழைந்து தள்ளி, தென்னாசிய பிராந்தியத்தில் முக்கிய தேசிய விடுதலைப் போராட்டமாக இடம் பெற்றுவிட்ட தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தினை பிரேமதாசவின் முதலாளித்துவ அரசியல் வாழ்க்கையில் இல்லாத 'உண்மை நேர்மை' யை கொண்டு நிர்ணயம் செய்யவும், அதில் நம்பிக்கை வைக்குமாறும் அழைப்பு விடுக்கவும் செய்யும் குட்டி முதலாளித்துவ தேசியவாத வங்குரோத்தினை என்னென்பது?

பிரேமதாச—விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை முன்நிபந்தனை இருந்தாலும் இல்லாவிட்டாலும் 1947ல் நிறுவப்பட்ட இந்த வம்பு இனவாத அரசினை கட்டிக் காப்பது என்ற ஒரே இலக்குடனேயே நடைபெறுகின்றது வடக்கு — கிழக்கில் தேசிய விடுதலை யுத்தத்தால் சிதறடிக்கப்பட்ட குற்றுயிராக உள்ள ஒடுக்கு முறை முதலாளித்துவ அரச இயந்திரத்தினை–ஆயுதப்படைகள், பொலிஸ் நீதிமன்றம், சிறை – மீண்டும் உயிரூட்டுதல், பாசிச ஜே. வி. பி. தலைவர்களை படுகொலை செய்ததோடு அரசினால் நிறுவப் பெற்றுள்ள புதிய ஒடுக்குமுறை அதிகாரங்களை முதலாளித்துவ நெருக்கடிக்கு எதிராக கிளர்ந்து வரும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக பயன்படுத்துதல், தமிழ் ஈழம்–இலங்கை ஐக்கிய சோசலிசக் குடியரசு என்ற சுயாதீன மான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடும் ஒரே தொழிலாள வர்க்க கட்சியான பு. க காவை சிதறடித்தல் என்பன இவற்றில் முக்கியமானவை.

அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையின் பின்னர் நாம் மேலே குறிப்பிட்டுள்ள அரசினைப் புனருத்தாரணம் செய்யும் வேலைகள் ஐந்து நட்சத்திர ஹில்டன் ஹோட்டலில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்ற சமயத்திலேயே ஆரம்பமாகிவிட்டன. பொலிஸ் நிலையங்களை திறத்தல், இராணுவ முகாம்களை புதுப்பித்தல், காரை நகர் கடற்படைமுகாம் விஸ்தரிப்பு என்பன ஏற்கனவே இடம்பெற்றுவிட்டன.

பருத்தித்துறை மோதுதலில் இறங்குவதற்கான சக்தியை வடமராட்சியில் தோல்வியை ஒப்பும் கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்ட படைகள் பெற்றது எப்படி என்ற கேள்வியை ஒவ்வொரு வர்க்கப் போராளியும் எழுப்பியாக வேண்டும். சமசமாஜ–கம்யூனிச – நவசமசமாஜ–இ.தொ கா. தலைவர்கள் இந்திய ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து இந்திய – இலங்கை உடன்படிக்கையை ஆதரித்தமையும் மீண்டும் வடக்கு கிழக்கில் 'சட்டமும்–ஒழுங்கும்



வே. பிரபாகரன்

நடவடிக்கைகளுக்கு வழங்கிய மனப்பூர்வமான ஆதரவும் அத்தோடு விடுதலைப் புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்ற சமரச அரசியலை சாதகமாக்கிக் கொண்டு விடுதலைப் புலிகளை உடனடியாக ஆயுதங்களை ஒப்படைக்கும்படி கோரும் படு பிற்போக்குப் பிரச்சாரத்தினை நடாத்துவதில் முன்நின்றமையும், தொழிலாள ஐக்கிய முன்னணிக்கு எதிரான இவர்களின் நிலைப்பாடும் இதற்கு கைகொடுத்தது.

இந்த தொழிலாள வர்க்க துரோகிகளின் மக்கள் முன்னணி அரசியலை மறுபுறம் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட குட்டி முதலாளித்துவ விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான அன்டன் பாலசிங்கம் முதலாளித்துவ அரசயடைகளை அமைக்கவும், பலப்படுத்தவும் முன்வந்தார்: ''மாகாண பொலிஸ் படைப் பிரிவுகளை அமைக்கவும் பொலிஸ் அமைப்பில் சேர்ந்து கொள்ள நாம் தயார். மற்றும் குழுக்களும் வரலாம் . . . புலிகள் இயக்கம் இன்று சமாதானத்துக்கும் அரசியல் தீர்வுக்கும் முன் நிற்கிறது . . . தோளோடு தோள் சேர்ந்து வீதியில் செல்ல நாம் தயார்.''

இந்த 'தோளோடுதோள் சேரும்' நடவடிக்கையினால் வடக்கு–கிழக்கில் விடுதலைப் போராட்டம் எதிர் நோக்கியுள்ள பேராபத்துக்கு வீ. எம். வீதி சம்பவங்கள் நல்லதோர் எடுத்துக் காட்டு.

எனினும் இந்த 'தோளோடு தோள்' கூட்டும் நடவடிக்கையை 7 ஆண்டுகளுக்கு மேலாக எதிரிப் படைகளுடன் முகம் கொடுத்துப் போராடிய போராளிகளும், பொதுமக்களும், அங்கீகரிக்கத் தயார் இல்லை. ஆதலால் இதனை ஒரே கல்லில் வென்றுவிட முடியாது. பல்லாண்டு காலமாக எண்ணற்ற தியாகங்களுக்கு மத்தியில் போராடி கெரில்லா தளங்களில் இருந்து பெரும் எதிர்பார்ப்புக்களுடன் வெளியரங்குக்கு வந்துள்ள விடுதலைப் புலிகளும் விடுதலைப் பறவைகளும் இந்த ஒடுக்குமுறை ஒற்றையாட்சி அரசுக்கு பலம் சேர்க்கும் நிலைக்கு எடுத்த எடுப்பில் கரம் உயர்த்தப் போவதில்லை. இந்நிலைக்கு பொது மக்களையும் விடுதலைப் புலிகள் அங்கத்தினர்களையும் கொணர்வதில் பிரபாகரன் தலைமை முகம் கொடுக்கும் பிரச்சினைகளையிட்டு அரசு நன்கு அறியும்.

இந்த பருத்தித்துறை மோதுதல் இடம்பெற்ற மறுநாள் (ஏப்ரல் 12) நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கூறியதாவது:

''வடக்கு–கிழக்கில் அடிமட்டத்தில் சில நச்சரிப்புக்கள் இருந்து வருகின்றன. அவை தீர்க்கப்பட வேண்டியுள்ளது. மூடி மறைப்பதற்கு ஒன்றுமில்லை தமிழீழ விடுதலைப் புலி காரியாளர்களின் அடிமட்டத்தில் சில அளவுக்கடந்த ஆர்வம் இருந்து வருகின்றது. அவை எமது கவனத்திற்கு கொணரப்பட்டுள்ளன. அதனால் உடனடியான அக்கறை இருந்து வந்ததோடு சங்கடமான நிலைமையும் தவிர்க்கப்பட வேண்டியுள்ளது.''

அமைச்சர் விஜேரத்னவின் இந்த அறிக்கையும், அன்டன் பாலசிங்கத்தின் அறிக்கையும் இவ்விருசாராருக்கும் இடையே ஒற்றையாட்சி முறையை ஏற்பது, சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை கைவிடுவது ஆயுதப்படைகளை வடக்கு–கிழக்கில் பலப்படுத்துவது உள்ளடங்கலாக எந்தவொரு விவகாரத்திலும் கருத்து வேறுபாடு கிடையாது என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துள்ளது. இவர்கள் கூட்டாகவும் தனித்தும் முகம் கொடுக்கும் பிரச்சினை மேலே குறிப்பிட்ட 'அடிமட்ட' காரியாளர்களையும், இந்திய — இலங்கை ஒப்பந்தம், இந்தியப் படைகளை வெளியேற்றுதல் சம்பந்தமான பிரச்சினைகளில் உறுதியானதும் சமரசமற்றதுமாக நிலைப்பாட்டினைக் கடைப்பிடித்த, இன்னும் கடைப்பிடித்து வரும் வெகுஜனங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொணர்வது எப்படி என்பதே.

ஒரு வருடத்துக்கு மேலாக இடம்பெற்று வரும் அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் 6வது அரசியலமைப்பினை நீக்குதல் சிங்களக் குடியேற்றம் போன்ற பிரச்சினைகளுக்கு தன்னும் தீர்வுகாண பிரேமதாச அரசாங்கம் வாக்குறுதி அளிக்காமை இந்தப் பேச்சுவார்த்தைகளின் பண்பினையும். பிரேமதாசவின் நேர்மையை'யும் அம்பலப் படுத்துகின்றது.

இந்நிலையில் அமைச்சர் விஜேரத்ன குறிப்பிட்ட 'அடிமட்ட' நச்சரிப்புக்களின்' தாக்கம் எந்தளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையை சன்டினிஸ்டா டானியல் ஒட்டேகா பாணியில் மக்கள் தீர்ப்புக்கு (தேர்தல்) அடிபணிவதாகக் கூறி வெளிவெளியாக அடிபணியமுடியாதுள்ளது தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை உக்கிரமடையச் செய்த தீர்வு காணப்படாத ஜனநாயகப் புரட்சியின் பிரச்சினைகளின் உக்கிரத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் அமைப்பாளர் ரூபன் 'ஐலன்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ''கடந்த 40 ஆண்டு காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்திற்கு மகாவலி நீரை பயன்படுத்தவில்லை. மேலும் மகாவலி இந்த மாவட்டத்தின் மூதூர் பிராந்தியம் ஊடாக ஓடுகின்றது. ஓடிச் சென்று வீணாக கடலில் கலக்கின்றது. மகாவலி இதனூடாக பெருக்கெடுத்த போதும் தண்ணீர் பற்றுக்குறையால் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கும் பிரதேசங்களில் மூதூரும் ஒன்று மூதூரில் மக்கள் வன்னிகுடியிருப்பு, நல்லூர், இளக்கந்தை பாட்டாளிபுரம் மற்றும் தூரக் கிராமங்களுக்குச் சென்று தங்கள் குடிநீரை கொணர வேண்டியுள்ளது.''

வடக்கு கிழக்கில் வாழும் இலட்சோப இலட்சம் தமிழ் ஏழை விவசாயிகளின் இந்த அடிப்படைப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க கடந்த 40 ஆண்டுகால 'சுதந்திரத்தின்' பின்னைய ஆட்சியாளர்கள் அடியோடு தவறிய நிலையிலேயே விவசாயிகள் விடுதலைப் போராட்டத்தின் முன்னணிக்குத் தள்ளப்பட்டது மட்டுமன்றி இன்று குட்டி முதலாளித்துவ விடுதலைப் புலிகள் தலைமையை போராட்டத்திலிருந்து விலகி எதிரியுடன் பேச்சுக்கு செல்லும் நெருக்கடிக்கு தள்ளும் நிலைக்கு அவர்களின் அண்தரளல் அபிவிருத்தி கண்டும் உள்ளது.

பிரேமதாச – விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை இடம் பெற்ற வேளையில் எமது சகாதர ஏடாகிய 'கம்கறு மாவத்த'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி 25 தேர்தலின் பின்னைய நிகரகுவா படிப்பினைகள்

## வேர்க்கஸ் லீக் அரசியல் குழு அறிக்கை

பெப்ரவரி 25ந் திகதிய நிகரகுவா தேர்தலின் வெளிப்பாடுகள், அமெரிக்காவிலும் அனைத்துலகிலும் உள்ள தொழிலாள வர்க்கத்துக்கு பிரமாண்டமான முக்கியத்துவம் மிக்கவை. இது 10 வருடகால சண்டினிஸ்டா ஆட்சியை ஒரு முடிவுக்குக் கொணர்வதோடு இந்த மூலோபாய அனுபவத்தில் இருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளும்படியும் வேண்டிக்கொள்கின்றது. இதில் தனித்துவமான வர்க்க சக்திகளும், வேலைத்திட்டங்களும் பரீட்சிக்கப்பட்டதோடு உண்மையில் அவை என்ன என்பதும் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

நிகரகுவா ஆளும் சண்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி எப்எஸ்எல்என்) வழங்கியுள்ள தோல்வி சலுகை, அவை எவ்வளவுதான் தீவிரவாதிகளாக இருப்பினும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒரு உறுதியான போராட்டத்தினை நடாத்த முதலாளித்துவ குட்டி முதலாளித்துவ ஜனநாயகத்தின் உடல்ரீதியில் இயலாமையையும், அனைத்துலக மூலதனத்தின் ஒரு ஏஜன்சி என்ற முறையில் அதன் இறுதி பாத்திரத்தினையும் தெளிவாக நிரூபித்துள்ளது.

அரச அதிகாரத்தினை, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நேரடிக் கைப்பொம்மைகளிடமும் 10 ஆண்டுகளுக்கு மேலாக நிகரகுவா தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆயுதமும் கையுமாக எதிர்த்துப் போராடிய அதே அரசியல் சக்திகளிடமும் கோழைத்தனமானமுறையில் கையளிப்பதானது ஒடுக்கப்படும் மக்களைக் காட்டிக் கொடுக்கும் ஒரு தொகை சம்பவங்களினதும் தேசிய விடுதலை முன்னணியின் குட்டி முதலாளித்துவ தேசியவாதத் தலைமையின் ஏகாதிபத்திய அடிபணிவினதும் உச்சக்கட்டத்தினையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

இத்தொடரில், ஸ்டாலினசம் மத்திய அமெரிக்கப் புரட்சியினை தூக்கிலிடுபவர் ஆகச் செயற்பட்டுள்ளது. அத்தோடு சண்டினிஸ்டுகளை 'புரட்சிகர மார்க்சிஸ்டுகள்' எனவும் நிகரகுவா ஆட்சியை ஒரு 'தொழிலாளர் அரசாங்கம்' எனவும் அத்தோடு சோசலிசப் புரட்சியின் மாதிரி எனவும் கொண்டாடிய சகல திரிபுவாத, மத்தியவர்த போக்குக்களும் இக்காட்டிக் கொடுப்பின் கொலைகார பொறுப்புமிக்க சகபாடிகளாகின்றனர்.

நிகரகுவா சம்பவங்கள், புரட்சிகர தொழிலாள வர்க்க தலைமை நெருக்கடியையும் உலக முதலாளித்துவ நெருக்கடியின் துரித உக்கிரமடைவின் பெறுபேறாக தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் எதிர்கொள்ளும் பிரமாண்டமான ஆபத்துக்களையும் கோடிட்டுக் காட்டுகின்றது. அவை மத்திய அமெரிக்காவிலும் அனைத்துலகிலும் உள்ள தொழிலாளர்களின் முன்னிலையில் நிரந்தரப் புரட்சி வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகரப் பாட்டாளிவர்க்கக் கட்சிகளைக் கட்டி எழுப்ப வேண்டியதன் அவசியத்தினை முன்வைத்துள்ளன.

நிச அர்த்தத்தின்படி, சண்டினிஸ்டுகளின் அடிபணிவு ஒரு சகாப்தத்தின் முடிவினை சமிக்ஞை செய்கின்றது. இச்சகாப்தத்தில் ஒரு தொகை முதலாளித்துவ ஆட்சிகளும், குட்டி முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் புரட்சிகர தொழிலாள வர்க்கத்தின் ஒரு பதிலீடாகக் காட்டிக்கொள்ள முடிந்தது. 'முதலாளித்துவம் அல்லாத பாதை' அல்லது 'சோசலிசத்துக்கு நின்றுவந்ததாக' கூறிக்கொண்டு இந்த ஆட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக ஏகாதிபத்திய உலகச் சந்தையின் கட்டளைகளுக்கு அடிபணிந்தனர். லத்தீன் அமெரிக்காவில் பழைய முதலாளித்துவ தேசியவாத இயக்கங்கள் ஆர்ஜன்ரைன பெரோனிசம் அல்லது மெக்சிக்கோ பீ. ஆர். ஐ போன்றவை 'தேசிய அபிவிருத்தி' திட்டங்கள் என்ற நடிப்பையும் கூட கைவிட்டு விட்டு அரச கைத்தொழில்களையும் வழங்களையும் ஏகாதிபத்திய வங்கிகளுக்கும் பன்னாட்டுக் கம்பனிகளுக்கும் விற்றுத்தள்ளும் ஏகாதிபத்தியத்தின் நேரடி ஊழிய ஆட்சியை வகித்தனர்.

முதலாளித்துவத்தின் பத்திரிகை ஊதுகுழல்கள் உண்மையில் சண்டினிஸ்டாக்களின் தேர்தல் தோல்வி 'சோசலிசத்தின் வீழ்ச்சிக்கும்' 'ஜனநாயகத்தின் வெற்றிக்கும்' கிடைத்த வெற்றிக்கு மற்றுமோர் உதாரணம் எனப் பிரகடனம் செய்ய விரைந்தனர். இது ஓர் பொய். தொழிலாள வர்க்கம் நிகரகுவாவில் நிலைநாட்டப்பட்ட சோசலிசத்துக்கு பெரிதும் குறைதாக ஆட்சியை ஒரு போதும் கைப்பற்றவில்லை, சண்டினிஸ்டா ஆட்சி, ஒரு தொழிலாளர் அரசாங்கம் அன்றி ஒரு முதலாளித்துவ அரசாங்கமாகும். அதன் வேலைத்திட்டம் சோசலிசம் அன்றி, முதலாளித்துவமாகும்.

எவ்வாறெனினும் நிகரகுவாவினதும் கிழக்கு ஐரோப்பாவினதும் சம்பவங்களுக்கு இடையே ஒரு சமத்துவம் உண்டு. அவற்றின் வேறுபட்ட தோற்றம், வரலாற்று அபிவிருத்திகளுக்கு இடையிலும் இவ்விரு விடயங்களிலும் ஆட்சியின் நெருக்கடியானது யுத்தத்தின் பிற்கால ஒழுங்கின் வெடிப்பு, உலக ஏகாதிபத்தியத்தின் அடிப்படையான முக்கியமாக அதிகரித்து வரும் உலகளாவிய கூட்டு உற்பத்தி முறைக்கும் தேசிய அரச முறைக்கும் இடையேயான முரண்பாடுகளின் துரித வளர்ச்சியிலும் வேரூன்றி உள்ளன.

இந்நெருக்கடி, கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் கடைப்பிடித்துவந்த 'தனிநாட்டில் சோசலிசம்' நிகரகுவா குட்டி முதலாளித்துவ தேசியவாத சண்டினிஸ்டா முன்னணி இ[illegible] வாத வேலைத்திட்டங்களையும் வங்குரோத்தடையச் [illegible]

ஏகாதிபத்தியத்தின் அனைத்து குட்டி முதலாளித்துவ ஏஜன்சிகளும் — பின்தங்கிய நாடுகளின் குட்டி முதலாளித்துவ தேசியவாதிகள், உருக்குலைந்த, சீர்கெட்ட தொழிலாளர் அரசுகளின் ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள், சமூக ஜனநாயகம், முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிச விரோதி தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் — தொழிலாள வர்க்கத்தின் கடந்தகால போராட்டங்களின் மூலம் வென்றெடுக்கப்பட்ட சகல தோட்டங்களையும் ஒழித்துக்கட்டும் நிதி மூலதனத்தின் கோரிக்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டுவதை உதறித் தள்ளியுள்ளன. அதற்குப் பதிலாக அவை பொருளாதார நெருக்கடியின் முழுச் சுமையையும் தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் அப்பட்டமாக இணைகின்றனர்.



### தேர்தல் தோல்வி

சண்டினிஸ்டா தலைவர் டானியல் ஒட்டேகா, ச. தே. வி. முன்னணியின் தேர்தல் தோல்வியை நிகரகுவா மக்கள் 'தமது தலைகளுக்கு அமெரிக்க துவக்கு இலக்கு வைக்கப்பட்ட நிலையில் வாக்களித்துள்ளனர்' எனக் கூறி விளக்க முயன்றுள்ளார். கொன்ட்ரா யுத்தம் 30,000 நிகரகுவா மக்களின் உயிர்களை பலியாக்கியதோடு 200 கோடி டாலர் பொருட் சேதத்தினையும் உண்டுபண்ணியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத் தடையும் சர்வதேச கடன் சந்தைகளில் நிகரகுவாவுக்கு எதிரான ஒழுங்கு முறையாக பகிஷ்கரிப்பு ஏற்பாடுகளும் யுத்தத்துடன் சேர்ந்து வாழ்க்கைத் தரத்தினை அரைவாசியாக வெட்டி வீழ்த்துவதில் ஒரு மையப் பாத்திரத்தினை வகித்துள்ளது. சண்டினிஸ்டா வெற்றியடையும் நிலையில் நிகரகுவா மீதான அமெரிக்கா குரல்வளை நெரிப்பு இறுக்கமடையும் என்பதை புஷ் நிர்வாகம் தெளிவுபடுத்தி இருந்தது.

மேலும் மாஸ்கோ அதிகாரத்துவத்தினதும் லத்தீன் அமெரிக்கா பூராவும் உள்ள தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்கள். இரண்டினதும் சாந்தத்துடனான சம்மதத்தினைப் பெற்ற பனாமா ஆக்கிரமிப்பு, ஒரு அமெரிக்கத் தலையீடு இடம் பெறும் நிலையில் இந்த வட்டாரங்களில் இருந்து எந்த விதமான ஆதரவும் கிடைக்கப்போவதில்லை, என்பதை நிகரகுவா ஆட்சியாளர்களுக்கு எடுத்துக் காட்டியது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் உண்மையில் நிகரகுவா வாக்காளர்களின் தலைக்கு துப்பாக்கியை இலக்கு வைத்தது. ஆனால் சண்டினிஸ்டாக்கள் தோட்டாக்களை நிரப்பினர். வாக்களிப்பு நிகரகுவா இறைமை மிகவும் கேவலமான முறையில் மீறப்பட்ட நிலையில் நடைபெற்றது. அமெரிக்கா யூ. என். ஓ. எதிர்பாளர்களுக்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் இலட்சோப இலட்சம் டாலர்களை அள்ளி இறைத்து வந்தது. அத்தோடு வாக்களிப்பின் ஒவ்வொரு அம்சமும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

1979ல் ஜிம்மி காட்டர் ஜனாதிபதி என்ற முறையில் வெறுப்புக்குள்ளான சோமோசாவைக் காக்கவும் சண்டினிஸ்டாக்களின் வெற்றியைத் தடைசெய்யவும் அமெரிக்க ஆக்கிரமிப்புக்குக் குறைவான எதையும் செய்தவர். அவர் நிகரகுவா தேர்தலில் ஏகாதிபத்திய நடுவர் பாத்திரத்தினை வகித்ததோடு, தொடர்ந்து ஆட்சி கையளிக்கப்படுவதைப் பார்வையிட நிகரகுவாவிலேயே தங்கினார். ஐ. நா. திரையின் கீழ் செயற்பட்ட மாஜி சட்டமா அதிபர் இலியட் றிச்சாட்சன், அமெரிக்க அரசுகள் அமைப்பின் [illegible] செயலாளர் நாயகம் ஜோவா வாவு சோரேஸ், காட்டர் [illegible]ர் நூற்றுக்கணக்கான உதவியாளர்களின் உதவியுடன் ஒட்டேகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் சலுகை பேச்சினை வரைவது உட்பட தேர்தலின் சகல அம்சங்களையும் மேற்பார்வை செய்தனர்.

"இந்த வரலாற்றுத் தருணத்தில் சன்டினிஸ்டாக்கள் செய்யக்கூடிய முக்கிய பங்களிப்பு, எமது உணர்வுகளை, கட்டி எழுப்புகின்றதும், கலப்புப் பொருளாதாரத்தினை அடையவும் ஒரு சுதந்திர, சுயாதீன, ஜனநாயக நிகரகுவாவை அடையவும் வெளிச்சம் காட்டும் ஒரு களங்கமற்ற தூய தேர்தல் வழிமுறையை உத்தரவாதம் செய்வதே..." எதிர்ப்புரட்சி யூ. என். ஓ கூட்டுக்களிடம் தோல்வி கண்டதை ஒப்புக்கொண்டு ஒட்டேகா விடுத்த இந்த அறிக்கை குட்டிமுதலாளித்துவத்தின் முதுகெலும்பற்ற, தன்மையினதும் ச. தே வி. முன்னணி தலைமையின் பிலிஸ்தினிசத்தினதும் தெளிவான வடிவமாகும். ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மைகளிடம் ஆட்சியை ஒப்படைத்த ஒரு முதலாளித்துவ தேர்தலின் வெற்றிகரமான பூர்த்தி ஒரு வெற்றியை உள்ளடக்கிக் கொண்டுள்ளது என்ற இக்கருத்துப்பாடு, இளம் சோவியத் தொழிலாளர் அரசுக்கும் எதிரான சமூக ஜனநாயக ஓடுகாலி கார்ள் கவுட்ஸ்கியின் "ஜனநாயக" எதிர்ப்புக்களுக்கும், சேறடிப்புக்களுக்கும் ட்ரொட்ஸ்கி வழங்கிய சூடான பதிலை நினைவுக்குக் கொணர்கின்றது:

"இன்று அடிபணிந்தவர்களதும், கோழைகளதும் கட்சி அந்த கவுட்ஸ்கியின் கட்சி தொழிலாள வர்க்கத்துக்குச் சொல்கின்றது: பிரச்சினை இன்று வரலாற்றின் ஒரே சிருஷ்டிச் சக்தி நீயா என்பதன்றி சொத்துடமை வர்க்கங்கள் அபிவிருத்தி செய்த ஆளும் கொள்ளைக் கும்பலை வெளியே தூக்கிவீச நீ இலாபக்கனவனாக இருக்கின்றாயா என்பதே. பிரச்சினை, இப்பணியை உனது சார்பில் வேறு யாரேனும் இட்டு நிரப்புவார்களா என்பதன்றி இதனை நீ மேலும் ஒத்திபோட வரலாறு உனக்கு இடமளிக்குமா என்பதே. (இரத்தம்தோய்ந்த குழப்பங்களின் இன்றைய நிலைமை வெகு விரைவில் முதலாளித்துவத்தின் இறுதி அழிபாடுகளுக்கிடையே உன்னை நீயாகவே புதைத்து விட அச்சுறுத்துகின்றது.) ஆளும் ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களின் பிரச்சினை, இன்றோ அல்லது நாளையோ பொதுஜன அபிப்பிராயத்தினை ஏமாற்றவும், மீறவும், மோசடி செய்யவும் உங்களது 49 சதவீத வாக்குகளுக்கு எதிராக 51 சதவீத வாக்குக்களை சேகரிப்பதே. உலகம் ஒழிந்து போகட்டும், ஆனால் பாராளுமன்றப் பெரும்பான்மை நீடூழி வாழ்க!"

(பயங்கரவாதமும், கம்யூனிசமும் — நியூபார்க் — பக்கம் 43)

இந்த அசிங்கமான தேர்தல் செய்முறையை சன்டினிஸ்டா தலைமை தனது புரட்சிகர நடிப்புக்களுக்கு முடிவுகட்டவும், ஏகாதிபத்தியத்தின் கோரிக்கைகளுக்கு கீழ்ப்படிந்து ச. தே வி. முன்னணியை ஒரு தரமான முதலாளித்துவ தேசியக் கட்சியாக பரிணமம் செய்யவும் உத்தியோக பூர்வமாக பிரகடனம் செய்வதற்கான கருவியாக அணைத்துக் கொண்டுள்ளது.

தேர்தல் ஒழுங்கு செய்வதில் சன்டினிஸ்டாக்கள் எடுத்த பாதை ச. தே வி. முன்னணியை மெக்சிக்கோ ஆளும் பீ. ஆ. ஐ உடன் இரத்த உறவுள்ளதாக மாற்றுவதை இலக்காகக் கொண்டதாக தோன்றியது. தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து, நிகரகுவா பாராளுமன்றத்தில் 'விசுவாசமுள்ள எதிர்க்கட்சிக்கு' தலைமைதாங்கும் பேரில் ஒட்டேகா, டொமினிகன் குடியரசின் ஜுவான் பொஷ் ஜமெய்காவின் மைக்கேல் மன்லே போன்ற புள்ளிகளின் அடிச்சுவட்டில் செல்கிறார் இவர்கள் யங்கி ஏகாதிபத்தியத்துடன் மோதியதற்காக பதவிநீக்கம் செய்யப்பட்டதன் பின்னர் உள்ளூர் வெளிநாட்டு மூலதனங்களின் நலன்களைத் காக்கும் 'பொறுப்புள்ள' பாதுகாவலர்களாகினர்.

## யூ. என். ஓ. வின் எதிர்ப்புரட்சி வேலைத்திட்டம்

வெற்றியீட்டிய யூ. என். ஓ. கூட்டு, அதனது பொம்மை ஜனாதிபதி வேட்பாளர் வயலட் பாரியஸ் டி. சமோராவின் தலைமையில் எதிர்ப்புரட்சி வேலைத்திட்டத்தின் இரகசியங்களை மறைத்து வைக்கவில்லை. இது சன்டினிஸ்டா ஆட்சியில் அமுல் செய்யப்பட்ட சீர்திருத்தங்களை தலைகீழாக்க முயற்சிக்கிறது. யுத்தகாலத்தில் பறிமுதல் செய்யப்பட்ட கொன்ட்ராக் காரர்களதும் அவர்களது ஆதரவாளர்களதும் வியாபாரங்களையும், நிலங்களையும் மற்றும் சொத்துக்களையும் திருப்பி ஒப்படைக்கவுள்ளது. இது ஏகாதிபத்திய ஆலோசகர் என்ற முறையில் நிகரகுவாவின் பொருளாதார அரசியல் விவகாரங்களில் இறுதி முடிவெடுக்கும் அமெரிக்காவின் 1979 க்கு முன்னைய அந்தஸ்தினை புதுப்பிக்கத் திட்டமிட்டு வருகின்றது.

சமோரா ஆட்சியின் பொருளாதார வேலைத்திட்டம் ஏற்கனவே அதன் யேல் பல்கலைக்கழகத்தில் பயின்ற பொருளாதார ஆலோசகர் பிரான்சிஸ்கோ மெயோகா பலடாரேசினால் சுருக்கி விளக்கப்பட்டுள்ளது. இவர் தனது 'பொருளாதார மீட்சிக்கான யூ. என். ஓ நிகழ்ச்சித்திட்டத்'தினை தேர்தலுக்கு இரண்டு வாரங்களில் பின்னர் வாஷிங்டனில் புஷ் நிர்வாகத்திடம் கையளித்தார். இந்தப் பத்திரம் சகல அரச நிறுவனங்களையும் உள்ளூர், வெளியூர் முதலாளிகளுக்கு விற்பனை செய்யும் படியும், அரசாங்க மானியத்தினை அடியோடு ஒழிக்கும்படியும், பொருளாதார சட்ட விதிகளை அகற்றிவிடுமாறும் கோரியுள்ளது.

மேலும் மாற்றங்கள் பற்றிய சன்டினிஸ்டாக்களுடனான பேச்சுவார்த்தைகளில் மயோகா பழைய நிகரகுவா நாணயமான கொர்டோபாவிற்குப் பதிலாக ஒரு 'தங்க கொர்டோபா' உருவாக்கப்படவேண்டும் என வாதிட்டுள்ளார் கொர்டோபா இன்று ஒரு டொலருக்கு 64000 விற்பனையாகின்றது. புதியது தங்க வைப்புக்களின் ஆதரவுடன் அமெரிக்க நாணயத்துடன் ஒன்றுக்கு ஒன்று என்ற வீதத்தில் விற்பனையாகும். இந்த பிரேரணைகளையிட்டு சாமோரா கூட அச்சம் தெரிவித்துள்ளார். இது ஏற்கனவே ஆழமற்ற நிகரகுவா மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நாசமாக்கி தனது ஆட்சிக்கு ஒரு மரண அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவுடன் ஏற்கனவே ஒரு உடன்படிக்கை உள்ளதாயும் நிகரகுவாவின ஒதுக்கீடுகளை கட்டி எழுப்ப அமெரிக்கா 600 மில்லியன் டொலர்களை வழங்கும் எனவும் கூறி மயோகா இந்த அம்சங்களை தள்ளுபடி செய்துள்ளார்: தனது திட்டங்களை பேணி மயோரா கூறியதாவது: 'ஆரம்பத்தில் இருந்தே ஒரு பலத்த அதிர்ச்சியை பிரயோகிப்பது அவசியம். எப்படி நான் அதை செய்வது? சன்டினிஸ்டா பொருளாதாரம் முடிவுறும், தறுவாயில் உள்ளது. ஆதலால் கத்தியை கைப்பிடி வரைக்கும் குத்த வேண்டும்."

இந்த வேலைத்திட்டத்தினை அமுல் செய்யும் முயற்சி தொழிலாள வர்க்கத்திடமிருந்து பலத்த எதிர்ப்பினைத் தோற்றுவிக்கும். சன்டினிஸ்டா தலைமையின் காட்டிக் கொடுப்புக்கள் காரணமாக எதிரிகளின் கைக்கு தொடங்கிவைப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள நிலையிலேயே தொழிலாள வர்க்கம் போராட்டத்தினுள் காலடி வைக்கிறது. என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டும் 'ஜனநாயகத்தினை பாதுகாக்கும்" பம்மாத்தின் கீழ் நிகரகுவாவில் நேரடி அமெரிக்க இராணுவ தலையீட்டினை கோரும் 'சட்ட' உரிமையை தேர்தல் கொன்ட்ராஸ்களுக்கும், அவர்களது ஜனாதிபதிக்கும் வழங்கியுள்ளது.

## குட்டி முதலாளித்துவ தேசியவாதம்

நிகரகுவா சம்பவங்களைப் பொறுத்த வரையில் தவிர்க்க முடியாதது என்று எதுவும் இருக்கவில்லை அமெரிக்க ஏகாதிபத்தியம் நிகரகுவா போன்ற ஒரு சிறிய, வறிய தேசத்தினால் சவால் செய்யப்பட பெரிதும் சக்தி வாய்ந்தது என ஸ்டாலினிசம், திரிபுவாதம் குட்டி முதலாளித்துவ தீவிரவாதங்களின் கூட்டுச் சக்திகளினால் பெறப்பட்ட மனமுடைந்து முடிவானது நிகரகுவா புரட்சியின் காட்டிக் கொடுப்பில் தமது பங்கினை மூடிமறைப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு கபடமான மோசடியாகும். இந்த அபிவிருத்தியின் ஒவ்வொரு கட்டமும் நிர்ணயிக்கும் காரணிகளாக தொழிலாள வர்க்கத் தலைமை நெருக்கடி, வெளிநாட்டு, உள்ளூர் சுரண்டலாளர்களுக்கு எதிராக போராட்டத்தினை முடிவுவரை கொண்டு செல்ல முடியாத குட்டி முதலாளித்துவ தேசிய வாதத்தின் இயற்கையான இயலாமை ஆகியவற்றை கொண்டிருந்தன.

நிகரகுவா தொழிலாளர்களும், விவசாயிகளும் 1979 ஜூலை புரட்சியை சோமோசாவுக்கு எதிராக செய்தனர். ஜனநாயகப் புரட்சியின் அடிப்படைப் பணிகளை —யங்கி ஏகாதிபத்தியத்திடமிருந்து நிச தேசிய சுதந்திரம் — அடையும் பொருட்டு கொண்டரா கூலிப்படைகளுக்கு எதிரான யுத்தத்திலும் விவசாயப் பிரச்சினைகளைத் தீர்த்து அமெரிக்க நலன்களைப் பராமரிக்க வாஷிங்டனால் திணிக்கப்பட்ட சோமோசா சர்வாதிகாரத்தினை அழிக்கவும் அளப்பரிய தியாகங்களைச் செய்தனர். எவ்வாறெனினும் சன்டினிஸ்டாக்களின் குட்டி முதலாளித்துவ வேலைத்திட்டம் இந்த வரலாற்று இலக்குகளை அடையும் புரட்சிகரப் பாதையைத் தடுத்துவிட்டது

தேர்தலில் ச. தே, வி. முன்னணிக்கு எதிரான ஊசலாட்டத்தினை வெறுமனே ஏகாதிபத்தியத்தின் பயமுறுத்தல்கள் ஊடுருவல்கள் என்ற நோக்கில் இருந்து விளக்கிவிட முடியாது. ஏகாதிபத்தியத்தில் இருந்து ஒரு சுயாதீனமான பாதையை உருவாக்கவும் புரட்சியின் அடிப்படைப் பணியினை அமுல் செய்யவும் விருப்பமற்றதும் இயலாததும் என்பதை நிரூபித்துவிட்ட குட்டி முதலாளித்துவ தேசியவாத தலைவர்களுடனான தொழிலாள வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களதும் ஆழமான உண்மை நிலை மிசவும் அடிப்படையானது.

யூ என். ஓ. வின் எதிர்ப்புரட்சி வேலைத்திட்டங்கள் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே தயார் செய்யப்பட்டு சன்டினிஸ்டுகளால் அரைகுறையாக அமுல் செய்யப்பட்டும் விட்டன. இத்தொடரின் இதயத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொய்க்குதிரையாக தொழிற்பட்ட நான்கு கைப்பொம்மை ஆட்சி — எல் சல்வடோர், கௌதமாலா, கொண்டுராஸ் கொஸ்டாரிக்கா — தலைவர்களைக் கொண்ட மத்திய, அமெரிக்க சமாதானத் திட்டம் எனப்படுவதில் நிகரகுவா ஆட்சியாளர்கள் கலந்து கொண்டமை விளங்கியது.

## மத்திய அமெரிக்கா

சன்டினிஸ்டா ஆட்சி, கொடூர அரசியல் ஒடுக்குமுறை பொருளாதாரச் சுரண்டல், ஏகாதிபத்திய ஒடுக்குமுறைகளில் மத்திய அமெரிக்க அந்தஸ்தினை பேணும் பாத்திரத்தினை ஏற்றுக் கொண்டது. இது தனது முன்னைய 'எல்லைகளற்ற புரட்சி' என்ற சுலோகத்தினை நிராகரித்துவிட்டு ஏகாதிபத்தியத்தின் ஓர் எல்லைக்காவலாளியாக கையொப்பமிட்டுக் கொண்டது. இது அயலில் உள்ள எல் சல்வடோர் புரட்சியின் முதுகில் குத்தும் இறுதி முடிவினை எட்டியது கடந்த டிசம்பர், பரபுன்டோ மாட்டி தேசிய விடுதலை முன்னணி (எப்எம்எல்என்) யின் எதிர்த்தாக்குதலின் ஒரு மாதத்தின் பின்னர் ஒட்டேகா, மத்திய அமெரிக்க கைப்பொம்மைகளுடன் சேர்ந்து அல்பிரடோ கிறிஸ்தியானியின் சல்வடோர் கொலைகார கும்பல் ஆட்சியை புகழ்ந்தார் இது 'ஜனநாயக, பன்மைவாத பங்கு கொள்ளும் தொடரின் விளைவு' எனப் புகழ்ந்ததோடு கொன்ட்ரா கைக்கூலிப் படைகளுடன் சமத்துவமாக்கப்பட்ட எப். எம். எல். என் விடுதலைப் படைகளை உடனடியாக நிராயுதபாணியாக்கவும் கலைத்துவிடவும் கோரியது.

எல் சல்வடோர் புரட்சியை தாக்கியதோடு எல்லா முக்கிய அம்சங்களிலும் சோமோசா சர்வாதிகாரத்தின் இரத்த உறவு சகோதரனை ஒரு ஆட்சியை ஆதரித்ததன் மூலம் சன்டினிஸ்டாக்கள் தம்மை ஆட்சிக்குக் கொணர்ந்த அதே புரட்சியையே நிராகரிக்கின்றனர் என்பதை வெளிப்படையாக்கினர்.

மத்திய அமெரிக்காவினை ஐந்து தனித்தனியான முதலாளித்துவ தேசிய அரசுகளாக — ஒவ்வொன்றும் பொருளாதார ரீதியில் நின்றுபிடிக்க முடியாத, ஏகாதிபத்தியத்தில் தங்கியிருப்பது தவிர்க்க முடியாத — பிரிக்கும் சட்டமுறைமையை' அங்கீகரிப்பதானது மத்திய அமெரிக்காவில் தேசிய ஜனநாயகப் போராட்டத்தின் அடிப்படைப் பணியினை யங்கி ஏகாதிபத்தியத்தின் நெரிக்கும் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை செய்தலை — காட்டிக் கொடுப்பதாகும்.

சன்டினிஸ்டாக்கள், மத்திய அமெரிக்காவின் ஏனைய இடங்களில் இடம்பெறும் புரட்சிகரப் போராட்டங்களுக்கு புறமுதுகு காட்டுவது, நிகரகுவ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் உள்ளேயான அவர்களின் வர்க்க நிலைப்பாட்டில் இருந்து பிரிக்க முடியாததாகும். குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளுக்கு கம்யூனிச, பாட்டாளி வர்க்க சாயம் தீட்டும் சகல திரிபுவாதக் கண்டுபிடிப்புக்களுக்கும் முரணாக, டானியல் ஒட்டேகா தலைமையிலான ஆட்சி, ஒரு முதலாளித்துவ ஆட்சியாகும். முதலாளித்துவ சொத்து உறவுகளின் பாதுகாப்புக்கு தன்னை அர்ப்பணம் செய்ததும், தொழிலாள வர்க்கத்தின் ஆட்சி அதிகாரத்துக்கான போராட்டத்தினை எதிர்த்த ஒரு அரசாகும்.

1988 வேலை நிறுத்த அலையடிப்பின் போது, குட்டி முதலாளித்துவ தேசியவாத தலைமையின் வர்க்க நிலைப்பாடு ச. தே. வி. முன்னணியின் தேசிய இயக்குனர் சபையின் ஒன்பது படைத்தலைவர்களுள் ஒருவரான விக்டர் ரிருடோவினால் சுருக்கிக் கூறப்பட்டது. சன்டினிஸ்டாவின் உத்தியோகபூர்வமான பத்திரிகையான 'பரிக்காடா' வேலைநிறுத்தங்களின் வளர்ச்சி, பொது மக்களில் அதிகரித்துவந்த மனோநிலை பற்றி இவரிடம் கேள்வி கேட்டது. பொருளாதார நெருக்கடியின் முழுச் சுமையும் தொழிலாளர்களின் மீது திணிக்கப்பட்ட வேளையில் முதலாளிகளுக்கும் முன்னொருபோதும் இல்லாத அளவில் சலுகைகள் வழங்கப்பட்டதையிட்டு கேட்ட வேளையில் ரிருடோ வெடுக்கென்று பதிலளிக்கையில் ''இது முழு தொழிலாளர் இயக்கமும் செலுத்தி வரும் விலையாகும். அல்லது தொழிலாளர் இயக்கம் இந்த விலையை செலுத்த விரும்பவில்லையா? இது எல்லாமே சுவர்க்கத்தில் இருந்து அமிர்தம் போல் விழவேண்டும் என எதிர்பார்க்கின்றதா?

''தொழிலாளர்கள் கூட்டுக்கள், தேசிய ஐக்கிய திட்டம்... கலப்புப் பொருளாதாரம் பற்றி தெளிவாக இருக்கவேண்டும் சுமை அவர்கள் மேல் தொழிலாளர்கள் மேல் விழவேண்டும் என்பதையிட்டு தெளிவாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர்களுக்காகவே நாம் ஒரு புரட்சியுடன் கையாளுகின்றோம்... இது தொழிலாளர்களதும் விவசாயிகளதும் ஒரு புரட்சியாகும். தர்க்க ரீதியில் முக்கிய சுமை, பிரச்சினைகள் கஷ்டங்கள் அவர்கள் மேலேயே விழும். இந்தத் திட்டத்தின் சுமையை முதலாளி வர்க்கம் தாங்கிக் கொள்ளும் என நாம் எதிர்பார்க்க முடியாது.''

முதலாளி வர்க்கம் நன்மையடையும் பொருட்டு தொழிலாள வர்க்கத்திடமும் விவசாயிகளிடமும் தியாகங்களை பிடுங்கிக் கொள்ள குட்டி முதலாளித்துவ தேசியவாதிகள் எடுக்கும் 'சோசலிச' நடிப்பின் சுயஅம்பலத்துக்கு இதைவிட தெளிவான நிலை இருக்க முடியாது.

## முதலாளி வர்க்கத்தின் பணி

நிகரகுவாவின் முதலாளி வர்க்கத்தின் பகுதியினர் நாடு பூராவும் ஏகாதிபத்தியத்தினால் ஒடுக்குமுறைக்காளாகினர். இவர்கள் ஏகாதிபத்தியத்தினதும் அதன் தேசிய கைக்கூலியான சோமோசா சர்வாதிகாரத்தினதும் வரையறையற்ற ஆதிக்கத்துக்கு எதிராகவும் கொதித்து எழுந்தனர். இந்த ஆதிக்கம் நிகரகுவா தொழிலாள வர்க்கத்தினை தாம் சுபமாக சுரண்டுவதற்கான நிலைமைகளை அவர்கள் அபிவிருத்தி செய்வதை தடை செய்தது. எப். ஏ. ஓ. (பரந்த மக்கள் முன்னணி) போன்ற அமைப்புக்களில். அணிதிரண்டு சர்வாதிகாரத்துக்கு எதிராக வேலைகொள்வோர் வேலைநிறுத்தங்களை நடாத்தினர். சன்டினிஸ்டா முன்னணியின் தலைமையைச் சேர்ந்த தீவிரவாத குட்டி முதலாளித்துவ தட்டினர். இந்த சோமோசா எதிர்ப்பு முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டது. இது வயலட்டா சமோரா, அல்போன்சோ ரூபேயோ போன்ற மூலகங்களை 1979ல் தமது ஆட்சிக்குள் கொணர்ந்தது.

நிகரகுவா பொருளாதார அவலநிலைக்கு கடந்த தசாப்தம் பூராவும் ஒடுக்கப்பட்ட நாடுகளில் பொது வறுமைநிலையுடன் சேர்ந்து இருந்து வந்த ஏகாதிபத்திய இராணுவ, பொருளாதார ஆக்கிரமிப்பு மூலவரியாக இருந்து வந்த வேளையில் இந்த வெளிவாரி அழுத்தங்கள் மட்டும், சன்டினிஸ்டா புரட்சியின் 10 ஆண்டுகளில் ஒடுக்கப்படும் மக்களுக்கும் தேசிய முதலாளி வர்க்கத்திற்கும் இடையேயான பொருளாதார தொடுவானம் பிரமாண்டமான முறையில் அதிகரித்தது என்ற உண்மையை விளக்கிவிடமாட்டா. 1980ல் இருந்து அரச உதவிமான்ய கொள்கைகள் நிகரகுவா முதலாளி வர்க்கத்துக்கு பெருவாரியான இலாபத்தினை வழங்கிய அதே வேளையில் சராசரித் தொழிலாளியின் சம்பளம் 90 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டது. சமோராவும், ரூபேயோவும் ஆரம்பத்திலேயே ஆட்சியில் இருந்து விலகிய போதிலும், விலகிச் சென்ற அரசாங்க அதிகாரிகள் பிரதிநிதித்துவம் செய்த முதலாளித்துவப் போக்குக்களைச் சாந்தப்படுத்தும் தோல்வி கண்ட முயற்சிகளில் சன்டினிஸ்டாக்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தனர்.

1989 பெப்ரவரியில் திணிக்கப்பட்ட சன்டினிஸ்டா ஆட்சியின் பொருளாதார சிக்கனக் கொள்கையானது, சர்வதேச நாணய நிதயத்தினால் அமுல் செய்யப்பட்ட வமானப நிறைந்த பட்டினி 'சீராக்கல்' திட்டத்தின் அதே அடிப்படை வேலைத்திட்டத்தினை பிரதிநிதித்துவம் செய்தது உலகச் சந்தைக்கு பருத்தி, கோப்பி, கரும்பு உற்பத்தி செய்த பெருந்தோட்ட முதலாளித்துவச் சொந்தக்காரர்களுக்கு விவசாய ஏற்றுமதி முதலாளிகளுக்கு உபமானியம் வழங்கி வந்த வேளையில் இது தொழிலாளர்களின் நிச ஊதியத்தினை வெட்டிச் சம்பளத்தின் மூலம் பணவீக்கத்தினைக் குறைக்க முயன்றது. இத்துடன் பிரமாண்டமான நாணய மதிப்பிறக்கம், 34000 அரச ஊழியர்களின் முழுவேலைநீக்கம் முதலாளித்துவ 'உற்பத்தி ஊக்குவிப்புக்களை'' வழங்கும் பொருட்டு சமூக வேலைத்திட்டங்கள் வெட்டு என்பனவும் சேர்ந்து கொண்டன.

இந்த தொழிலாள வர்க்க எதிர்ப்பு வேலைத் திட்டத்துடன் சேர்ந்து அரசாங்கம் விவசாய உற்பத்திப் பொருட்கள் மீதான விலை மானியங்களை நீக்கியதோடு முழு இலாபத்தினையும் ஏற்றுமதி செய்வதை உத்தரவாதம் செய்யும் வகையில் வெளிநாட்டு முதலீடு மீதான ஒரு சட்டத்தினையும் அங்கீகரித்தது.

## முதலாளித்துவத்திற்கு பாதுகாப்பு

1979ல் தமது ஆட்சியின் தொடக்கத்தில் இருந்தே சன்டினிஸ்டாக்கள் ''கலப்பு பொருளாதாரத்'திட்டத்தின் கீழ் முதலாளித்துவ தனியார் சொத்தினை காக்க சபதம் பூண்ட ஒரு இடதுசாரி தேசியவாத முதலாளித்துவ ஆட்சியாளர்களாக வெளிப்பட்டதோடு வாயடிப்புமிக்க 'சோசலிசம்,' 'ஒரு தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கம்' 'தனியார் சொத்துடன் ஒரு புரட்சி' சுலோகங்களுடன் இதைப் பேணினர்.

நிகரகுவாவை அபிவிருத்தி செய்யும் இதன் திட்டம் உள்ளூர் முதலாளித்துவத்தினை பராமரிப்பதை மட்டுமன்றி ஏகாதிபத்தியச் சந்தைக்கு நிகரகுவாவினை அடிமைப்படுத்துவதையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. இது உற்பத்திச் சாதனங்களை சமூக மயமாக்கவும் புரட்சியை விஸ்தரிக்கவும் முயலவில்லை. மாறாக 1979ல் புரட்சித் தறுவாயில் பக்டரி, காணி உள்ளமர்வுகள் மூலம் பலம் வாய்ந்த விதத்தில் வெளிப்பாடாக ஒடுக்கப்படும் மக்களின் இயக்கத்தினை கட்டுப்படுத்தி வைக்கவும் தனியார் சொத்துடமையை பராமரிக்கவும் முயன்றது. சன்டினிஸ்டாக்களின் திட்டம், ஏகாதிபத்திய ஆதிக்கத்தினை தூக்கி வீசுவதாகவன்றி அதனுடனான உறவுகளை அபிவிருத்தி செய்வதாக இருந்தது இது நிகரகுவா பொருளாதாரத்தினை மூலப்பொருள் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டதிலிருந்து விவசாய கைத்தொழிலினை அல்லது தயார் செய்யப்பட்ட மூலப்பொருள் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டதாக மாற்ற முயன்றது.

சன்டினிஸ்டாக்கள் விவசாய—ஏற்றுமதி முதலாளிகளுக்கு பிரமாண்டமான சலுகைகளை வழங்கினர். அவர்களுக்கு பெரிதும் சாதகமான நாணய மாற்று வீதங்களையும் எதிரிடையாக கடன் வீதங்களையும் வழங்கினர். சுதேச முதலாளிகள். அவற்றை முதலீடுசெய்ய மறுத்து திருப்பிச் செலுத்தியதோடு மட்டுமன்றி மியாமி வங்கிக் கணக்குகளுக்கு ஊக இலாபங்களில் மில்லியன் கணக்காய் ஏற்றுமதி செய்தனர். இவற்றில் சில கொன்ட்ராக்கள் நிகரகுவா தொழிலாளர்களையும் விவசாயிகளையும் கொல்லும் துப்பாக்கி ரவைகளை கொள்வனவு செய்யவும் சென்றது.

சிக்கன திட்டங்களை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்தும் தொழிலாளர்கள் பல தருணங்களில் வேலை நீக்கம் செய்யப்பட்டனர் அல்லது படையில் சேர்க்கப்பட்டனர். அவர்களின் தலைவர்களில் சிலர் சிறையுள் தள்ளப்பட்டனர். இராணுவம் பக்டரிகளை ஆக்கிரமித்துக் கொள்ளல் பயன்படுத்தப்பட்டது. பாட்டாளிகளுக்கு எதிராக இந்த ஒடுக்குமுறை கட்டவிழ்க்கப்பட்ட அந்த வேளையில் சன்டினிஸ்டா ஆட்சி சோமோசாவின் தேசிய காவல்படை கொலைகாரர்களுக்கும் கொன்ட்ரா கைக்கூலிப் படைகளுக்கும் மன்னிப்பு வழங்குவதல் ஈடுபட்டது. இந்த காலப்பகுதியில் இது எதிர்ப்புரட்சிக் கொலைகாரர்களை சிறையில் இருந்து விடுதலை செய்ததோடு சன்டினிஸ்டாக்கள் பக்டரிகளுக்கும் கூட்டுறவு பண்ணை படைகளுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்த ஆயுதங்களை திருப்பி சேகரிக்க தொடங்கினர்.

## விவசாயப் பிரச்சினை

விவசாயச் சீர்திருத்தம், 'தேசிய ஐக்கியத்தினை' பராமரிக்கும் அதே கொள்கையின் அடிப்படையிலேயே ஆரம்பமாயிற்று. அதாவது, சன்டினிஸ்டாக்களின் தேசிய முதலாளிவர்க்கத்துடனான 'மூலோபாயர்' கூட்டு'. தேசிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு அடிப்படை நடவடிக்கையாக அவர்கள் நிலத்தினை தேசியமயமாக்கத் தவறினர். அதன் மூலம் நாட்டுப்புறங்களில் பின்தங்கிய நிலைமைக்கும், ஒடுக்குமுறைக்கும் அவசியமாக அடிப்படைகளைப் பேணினர்.

நிலச்சுவாந்தர்களில் கைவைக்காது விட்ட அதே வேளையில் சோமோசா அரச குடும்பத்திடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களை விவசாயப் கைத்தொழில் அரச பண்ணைகளாக கட்டி எழுப்ப மூலவளங்களைப் பயன்படுத்திய சமயத்தில் புரட்சி தமக்கு நிலங்களை வழங்கும் என்ற பிரமாண்டமான விவசாயிகளின் நம்பிக்கையை சிதறடித்ததன் மூலம் சன்டினிஸ்டாக்கள் அவர்களை அநியமாக்கினர். மேலும் விவசாய—ஏற்றுமதி முதலாளிகளுக்கு—முன்னுரிமை வெளிநாட்டு செலாவணி வீதங்களூடாக பெருமளவு சலுகைகளை வழங்கிய அதே வேளையில் சன்டினிஸ்டா ஆட்சி உள்ளூர் சந்தைக்கு உற்பத்தி செய்யும் சிறிய விவசாயிகளை அவர்களது பொருட்களை அரசுக்கு மலிவான விலையில் விற்பனை செய்யும்படி கோரியது.

கொன்ட்ராக்களின் அச்சுறுத்தலின் பேரிலேயே சன்டினிஸ்டா ஆட்சி எல்லைப் பிராந்தியங்களில் மிகவும் தீவிரமான காணிச் சீர்திருத்த வேலைத்திட்டத்தினை அமுல் செய்தது. கொன்ட்ராக்களுக்கு அனுதாபம் ஏற்படுவதை தடுக்கவே இது செய்யப்பட்டது. சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானதைத் தொடர்ந்து விவசாய சீர்திருத்தம் அடியோடு ஸ்தம்பித்தது.

## ஒரு முதலாளித்துவ ஆட்சி

சன்டினிஸ்டா ஆட்சியின் வர்க்கத்தன்மை தேர்தலில் அவர்களாலேயே தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. இது ஒரு ஜனாதிபதி, பாராளுமன்றம் தொழில்கள் இராணுவம்' கொண்ட பூரணத்துவமான ஒரு முதலாளித்துவ ஆட்சியாகும். நிகரகுவா புரட்சியில் ஒருபோதுமே தொழிலாளர் சபைகளோ அல்லது தொழிலாளர் ஆட்சியின் சுயாதீனமான எந்த வாரு கருவிகளோ அமைக்கப்பட்டது கிடையாது எந்தவொரு குட்டி முதலாளித்துவ தேசிய ஆட்சிகளைப் போலவே — கியூபாவின் பிடல் காஸ்ட்ரோ முதல் லிபியாவின் மூவாமார் கடாபி வரை—சன்டினிஸ்டாக்கள் தமது சொந்த 'மக்கள்' கமிட்டிகளையும் (. டி. எஸ்.) அல்லது சன்டினிஸ்டா பாதுகாப்பு கமிட்டிகளையும் நிறுவினர் வேறு எங்கேயும் போலவே நிகரகுவாவிலும் திரிபுவாத சந்தர்ப்பவாதிகள் இந்தக் கமிட்டிகளை சோவியத்தின் பண்புகளுடன் ஒப்பிட்டு மனதில் இருத்த முயன்றனர். அவை எந்த விதத்தில் அந்த வகையறாவைச் சேர்ந்தன அல்ல. மாறாக அவை தொழிலாள வர்க்கத்தின் நிச அமைப்புக்கள் தோன்றுவதைத் தடுக்க ஆளும் கட்சியால் திணிக்கப்பட்டவை. அவை சுயாதீனமானவையோ அல்லது ஜனநாயகப் பண்பை கொண்டவையோ அன்று.

அதிகார மாற்றத்தின் பண்பு மதிப்பீடுகள், சன்டினிஸ்டா ஆட்சியின் வர்க்கத் தன்மையை மேலும் தாங்கி நிற்கின்றன. ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வயலட்டா சமோரா, 1979ல் சன்டினிஸ்டாக்கள் அமைத்த தேசிய புனர்நிர்மாண அரசாங்கத்தின் ஒரு அங்கத்தினராவாள். யூ.என் ஓ. வின் உப-ஜனாதிபதி வேட்பாளரான உக்கிரமான வலதுசாரி வேர்ஜிலியோ கோடோயி அதே அரசாங்கத்தில் தொழிலாளர் செயலாளராக சன்டினிஸ்டாக்களால் பேர்குறிப்பிடப்பட்டார். யூ. என் ஓ. வின் உயர் ஆலோச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்களும் எதிர்கால அமைச்சர்களுமான அல்பிரடோ சீசர், அல்போன்சோ ரொபேலோ, வெட்ரோ ஜோகுயின் சமோரா (ஜூனியர்) போன்றவர்கள் சன்டினிஸ்டா அரசாங்கத்தின் மாஜி அதிகாரிகளும் ஆதரவாளர்களும் ஆவர். இவர்கள் கொன்ட்ராஸ் தலைமைப் பீடத்தில் சீ. ஏ. கூலி ஏஜன்டுகளாக மாறிச் சென்றவர்கள்.

மேலும் தேர்தலில் ஜிம்மி கார்ட்டர் வகித்த பாத்திரம் தற்செயலானதல்ல. ஆரம்பத்தில் இருந்தே குட்டி முதலாளித்துவ தேசியவாத சன்டினிஸ்டா தலைமையின் அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றிய மனப்பாங்கு ஏகாதிபத்திய முதலாளிவர்க்கத்தின் 'லிபரல்' பிரிவினரிடம் தொடுவதாகவே இருந்தது. இது முதலாளித்துவ சுரண்டலாளர் பொது எதிரிக்கு எதிரான ஐக்கியத்துக்காக அமெரிக்கத் தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு போதும் ஒரு வர்க்க அழைப்பு விடுத்ததே கிடையாது. இதற்கு மாறாக இது அமெரிக்காவில் உள்ள ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பாளர்களை தமது எதிர்ப்புக்களை ஜனநாயகக் கட்சியின் அணியில் சேர்க்கும்படியும் இறுதியில் இந்த முதலாளித்துவக் கட்சியில் சேரும்படியும் இதன் பிற்போக்கு வேட்பாளர்களை தெரிவு செய்யும் படியும் தூண்டியது.

இந்த ஆட்சியின் வர்க்கப் பண்பு நிலைப்பாட்டில் இருந்து பார்க்கையில் சன்டினிஸ்டா ஆட்சி சோமோசாவின் வரிவிதிப்பு முறையை மட்டுமன்றி அதன் அடக்குமுறை தொழிலாளர் கொள்வதையும் பாராமரித்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது! ஜனநாயகப் புரட்சியின் வழமையான இலக்குகளை தன்னும் அடையமுடியாத குட்டி முதலாளித்துவ தேசியவாத தலைமையின் இயலாமையானது சமயக் கல்விக்கு தொடர்ந்தும் அரசியலமைப்புச் சட்டத்தில் அரச பாதுகாப்பு வழங்கப்பட்டதன் மூலம் வெளிப்பாடாகியது. கத்தோலிக்க திருச்சபைக்கு மற்றுமோர் பிற்போக்குச் சலுகையாக கருத்தடை தொடர்ந்தும் ஒரு குற்றமாக இருந்து வருகின்றது.

## நிரந்தரப் புரட்சி

பெப்ரவரி 25 தேர்தல் சமயத்தில் எல்லாவற்றுக்கும் மேலாக கடந்த கால குட்டி முதலாளித்துவ தேசிய வாதத்தின் ஆதிக்கத்தின் விளைவுகளின் ஒரு மூலோபாய ஆய்வும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஒரு பகுதியாக மத்திய அமெரிக்காவில் ஒரு அகில சுயாதீனமான புரட்சிகர பாட்டாளிவர்க்க கட்சியை உருவாக்குவதும் அவசியப்பட்டது

அத்தகைய ஒரு கட்சி, ஏகாதிபத்திய சகாப்தத்தில் பாட்டாளிவர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படை முன்நோக்காக ட்ரொட்ஸ்கியால் அபிவிருத்தி செய்யப்பட்ட நிரந்தரப் புரட்சி மூலோபாயத்தின் அடிப்படையில் மட்டுமே நிறுவப்பட முடியும் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு, 1917 அக்டோபர் புரட்சி மூலம் உறுதிப்படுத்தப்பட்டது இதில் பாட்டாளி வர்க்கம் போல்ஷிவிக்குகளின் தலைமையின் கீழ் நகர்ப்புற, ஒடுக்கப்படும் மக்களுக்கும் நகர்ப்புற குட்டி முதலாளித்துவ மக்களுக்கும் தலைமைதாங்கி அரைநிலமானித்துவ நிலப் பிரபு சாரையும், முதலாளி வர்க்கத்தையும் தூக்கி வீசி, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தினை நிலைநாட்டியது.

ட்ரொட்ஸ்கி, மென்ஷிவிக் 'இருகட்டப் புரட்சி' 'நான்கு வர்க்கக் கூட்டு' என்ற பிற்போக்கு கோட்பாடுகளுக்கு எதிராக நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டைப் பேணினர். ஸ்டாலின் பாட்டாளி வர்க்கத்தினை தேசிய முதலாளி வர்க்கத்துக்கு அடிபணியச் செய்யும் பொருட்டு இக்கோட்பாடுகளுக்கு புத்துயிரூட்டினர்.

நிகரகுவா அனுபவங்கள் நிரந்தரப் புரட்சியின் அடிப்படைக் கருத்தினை மீண்டும் ஊர்ஜிதம் செய்தது. ஏகாதிபத்தியத்தினால் ஒடுக்கப்பட்ட நாடுகளில் ஜனநாயகப் புரட்சியை முதலாளி வர்க்கத்தின் கீழோ அல்லது அதன் எந்தவொரு கன்னையின் கீழோ அடைந்துவிட முடியாது. இந்த வர்க்கமும், குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளிடையே உள்ள இதன் பேச்சாளர்களும் உடல்ரீதியில் எந்தவொரு சுயாதீனமான பாத்திரத்தினையும் ஆற்ற இலாயக்கற்றவர்களாக உள்ளன. ஏகாதிபத்தியத்தின் மீதான அவர்களின் சாய்வும், பாட்டாளிவர்க்கம் பற்றிய அவர்களது பீதியும் அவர்கள் ஜனநாயகப் பணிகளை பூரணமாக்குவதை இயலாமல் செய்வதோடு அவர்களின் ஆரம்ப சுலோகங்கள் எவ்வளவுதான் இடதுசாரித்தொனியுள்ளதாக இருந்தபோதிலும் அவர்கள் இறுதியில் பிற்போக்கு பக்கம் திரும்புவதை ஊர்ஜிதம் செய்கின்றது.

விவசாயிகளதும் ஒடுக்கப்படும் மக்களதும் தலைமையை முழுமையாக வெற்றி கொள்வதன் மூலம் பாட்டாளி வர்க்கம் மட்டுமே தனது சொந்த விதி முறைகள் மூலம — சோசலிசப் புரட்சி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினை நிலைநாட்டுவதன் மூலம் — இந்த பணிகளை அமுல் செய்ய இலாயக்கானது. இந்தப் போராட்டம் தவிர்க்க முடியாத விதத்தில் சோசலிசத்துக்கான தொழிலாளர்களின் வர்க்கக் கோரிக்கைகளை எழுப்புவதோடு. உலக சோசலிசப் புரட்சியின் அடிப்படையில் மட்டுமே பராமரிக்கப்படவும், பூரணத்துவம் செய்யப்படவும் முடியும்.

1917 அக்டோபர் புரட்சியில் மிகவும் பலம் வாய்ந்த முறையில் ஊர்ஜிதம் செய்யப்பட்ட இந்த அடிப்படை ஆய்வுகள் நிகரகுவாவில் மட்டுமன்றி கடந்த தசாப்தங்கள் பூராவும் ஒரு நாட்டின் பின் மற்றொன்றாக எதிரிடையாக நிரூபிக்கப்பட்டன. ஜனநாயகப் புரட்சி, முதலாளி வர்க்கத்தினாலும் அதனது குட்டி முதலாளிவர்க்க ஏஜன்டுகளாலும் காட்டிக் கொடுக்கப்பட்டது. இவை தமது சொந்த வர்க்க நலன்களுக்காக தேசிய போராட்டங்களில் மக்களின் தியாகங்களை சுரண்டின. அல்ஜீரியா, பங்களாதேஷ், சிம்பாபே, மொஷாம்பிக் தேசிய விடுதலைப் போராட்டங்களின் பெறுபேறு இவையே. இவை ஒரு சில உதாரணங்கள் மட்டுமே.

உடனடியான கடந்த காலப்பகுதியானது சன்டினிஸ்டாக்களினதை மட்டுமன்றி, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினது வரலாற்றுக் காட்டிக் கொடுப்பையும் கூடவே கண்டுகொண்டுள்ளது. பீ. எல் ஓ. தனது ஜனநாயக பாலஸ்தீனம் என்ற அடிப்படை வேலைத்திட்டத்தினை உதறித்தள்ளிவிட்டு சீயோனிச இஸ்ரேல் அரசின் சட்டமுறைமையை அங்கீகரித்துள்ளது. இலங்கையில் தமிழ்ப் புலிகள் முதலில் எதிர்ப்புரட்சி இந்திய — இலங்கை உடன்படிக்கையை அங்கீகரித்துவிட்டு பின்னர் [illegible] தொடர்ச்சியான ஆக்கிரமிப்புக்கு எதிராக இலங்கை [illegible] யுடன் தமது கூட்டினை பிரகடனம் செய்தனர்.

## ஸ்டாலினிசம்

மத்திய அமெரிக்க மக்களின் புரட்சிகர அபிலாசைகளைச் சிதறடிப்பதில் ஸ்டாலினிசம் ஒரு நேரடிப் பாத்திரம் வகித்துள்ளது. இது அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டது. நிகரகுவாவில் கொர்பச்சேவ் அதிகாரத்துவத்தின் உதவிக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நன்றியைத் தெரிவிக்கும் பொருட்டு பெப்ரவரி 25 தேர்தலைத் தொடர்ந்து ஒரு விசேட சுருக்கவுரைக் கூட்டத்தினை கூட்டியது.

சோவியத் வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் இயன் போலியாய் தேர்தல் முடிவுகளையிட்டுத் தனது திருப்தியைத் தெரிவித்துக்கொண்டார். ''நிகரகுவா மக்கள் தமது தெரிவினை செய்துள்ளார்கள். அவர்கள் சமாதானம், சுதந்திரம், ஜனநாயகம் தேசிய ஒருமைப்பாடு, இணக்கம் நாட்டின் பொருளாதார புனருத்தாரணம் சமூக முன்னேற்றம் என்பவற்றுக்காக வாக்களித்துள்ளனர்'' என்றார்.

நிகரகுவாவின் மீண்டும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நேரடிக் கட்டுப்பாட்டினுள் தள்ளிவிட கொர்பச்சேவ் அதிகாரத்துவம் மேற்கொண்டுவந்த தொடர்ச்சியான நெருக்குசாரத்தின் உச்சக் கட்டமே இந்த ஒத்துழைப்பாகும். புரட்சியின் ஆரம்பத்தில் இருந்தே சோவியத் ஸ்டாலினிஸ்டுகள் மத்திய அமெரிக்காவில் வாஷிங்டன் ஆளுமையை சவால் செய்யவோ அல்லது கியூபாவில் காஸ்ட்ரோ ஆட்சிக்கு செய்தது போல் குட்டி முதலாளித்துவ ஆட்சிக்கு உபமானியம் அளிக்கவோ தமக்கு நோக்கம் கிடையாது என்பதை தெளிவுபடுத்தினர்.

கொர்பச்சேவின் கீழ் சோவியத் அதிகாரத்துவம் சோவியத் ருஷ்யாவின் உள்ளே முதலாளித்துவ சொத்து உறவுகளை புனருத்தாரனம் செய்யும் ஒரு வேலைத்திட்டத்துக்கு எடுத்த திருப்பம், சோவியத் யூனியன் அனைத்துலக இரண்டிற்கும் தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான ஏகாதிபத்தியத்துடனான புதியதோர் மட்டத்திலான சேர்க்கையுடன் இணைந்து கொண்டது. ஸ்டாலினிச ஆட்சி. தன்னை ஒரு புதிய முதலாளி வர்க்கமாக பரிணமம் செய்யும் இலக்கில் உலக ஏகாதிபத்தியத்துடன் ஒரு நேரடி கூட்டினை ஏற்படுத்திக்கொண்டது. இதன் விளைவாக 'சோசலிசம்' அல்லது 'ஏகாதிபத்திய எதிர்ப்பு' வெளிநாட்டு கொள்கை என்ற பம்மாத்துக்களை கூட கைவிட்டது.

1987ல் கொர்பச்சேவ் அதிகாரத்தவம் எஸ்கியுபுலஸ் உடன்படிக்கை ஊடாக ஏகாதிபத்தியத்துக்கு சன்டினிஸ்டா ஆட்சியை அடிபணியச் செய்வதற்கான ஒரு கருவியாக மனுகுவாவுக்கான எண்ணெய் விநியோகங்களை வெட்டியது. அத்தோடு 1988ல் இருந்து இது ஆயுத ஏற்றுமதியை — 1989ல் முற்றாக வெட்டும் வரை — வெட்டிக் குறைத்தது. மால்டாவில் புஷ்சுடனான உச்சி மகாநாட்டில் கொர்பச்சேவ், சன்டினிஸ்டாக்கள் அமெரிக்க மேற்பார்வையின் கீழான தேர்தல்களை நடாத்தும் என்றும் அதன் முடிவுகளை ஏற்கும் என்றும் உத்தரவாதம் அளித்தார்.

நிகரகுவா ஸ்டாலினிசம் குறிப்பாக ஒரு இழிவான பாத்திரத்தின் வகித்தது. 1940ல் அமைக்கப்பட்ட நிகரகுவா கம்யூனிஸ்ட் கட்சி, 'பாசிசத்துக்கு எதிரான யுத்தத்துல் உடனடியாக சோமோசா சர்வாதிகாரத்துடன் கலந்துறையாடியது. கோடுங்கோல் மன்னன் தூக்கி வீசப்படும் வரை அவனுக்கு விசுவாசமாக இருந்து வந்தது 1979 தேசியப் புரட்சியின் தலைமை நிகரகுவா பாட்டாளி வர்க்கத்திடம் செல்லாமல் ச. தே. வி முன்னணியின் குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளிடம் சென்றதற்கு ஸ்டாலினிசத்தின் காட்டிக் கொடுப்பே முதல் பொறுப்பாகும். ஸ்டாலினிச ஆட்சியின் பிரிவைத் தொடர்ந்து இருகன்னைகளும் - சமூக ஜனநாயகத்துடன் கூட்டுச்சேர்ந்த பீ. எஸ். என்னும் (பீ. எஸ். என்) (நிகரகுவா சோசலிச கட்சி) பீ. சீ. டி. என்னும் (நிகரகுவா கம்யூனிஸ்ட் கட்சி) சோமோசாகளுடனும் கொன்ட்ரா ஆதரவாளர்களுடனும் யூ. என். ஓ. தேர்தல் கூட்டில் சேர்ந்தனர்.

## காஸ்ட்ரோ

காஸ்ட்ரோ ஆட்சி, மத்திய அமெரிக்கப் புரட்சியைக் காட்டிக் கொடுப்பதில் ஒரு சிறப்பு பாத்திரத்தினை வகித்துள்ளது. ஆரம்பத்தில் இருந்தே இது சன்டினிஸ்டாக்களை 'கியூபன் மாதிரியை' பின்பற்ற வேண்டாம் எனவும் அதற்குப் பதிலாக அமெரிக்க ஏகாதிபத்தியம், தேசிய முதலாளி வர்க்கம் இரண்டுடனும் சமரசத்துக்குச் செல்லும் படியும் ஆலோசனை வழங்கியது காஸ்ட்ரோ தனது சொந்த குட்டி முதலாளித்துவ தேசியவாத ஆட்சியை 31 வருடங்களுக்கு மேலும் தாங்கிப் பிடித்த சோவியத் மானியங்கள், பாதுகாப்பு வகையருக்கள் சன்டினிஸ்டா ஆட்சிக்கு கிடைக்கப் போவதில்லை என்ற வெளிப்படையான உண்மையை எடுத்துக்காட்டி இருந்தார்.

முன்னொருபோதும் இல்லாத விதத்தில் கிரெம்ளினின் ஏகாதிபத்தியத்துடனான நெருக்கமான உறவாடல்களுக்கு கிழக்கு ஐரோப்பாவில் முதலாளித்துவ புனருத்தாரணத்துக்கான முயற்சிகளதும் நிலைமைகளுக்குள் காஸ்ட்ரோ தனது சொநத சூழ்ச்சிகளுக்கு இடம் கிடைத்திருப்பதைக் கண்டார். காஸ்ட்ரோ. ஆட்சியின் அரசியல் நெருக்கடி கடந்த போராட்டக் காலத்தில் ஜெனரல், ஆர்னல்டோ ஓகோவாவின் அசிங்கமான வழக்கு விசாரணை மரண தண்டனை மூலமும் சமீபத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் இயக்கத்தின் எதிர்ப்பு போக்குக்கள் தலைநீட்டியதன் மூலமும் ஒடுக்கப்பட்டதாக மூலமும் வெளிப்பாடாகிற்று.

சன்டினிஸ்டாக்களைப் போலவே காஸ்ட்ராவும் கியூபாவில் ஜனநாயக புரட்சியின் அடிப்படைப் பணிகளைத் தீர்த்து வைக்கத்தவறிவிட்டார். சகல வகையைச் சேர்ந்த திரிபுவாதிகளாலும் ஒரு நிச சோசலிசம் எனவும் ஒரு 'தொழிலாளர் அரசு' எனக் கூட காட்டப்பட்ட காஸ்ட்ரோ ஆட்சி, ட்ரொட்ஸ்கிசம் சம்பந்தமான அதனது வெறிபிடித்த வெறுப்பின் மூலம் காட்டிக் கொண்டது போல் தொழிலாள வர்க்கத்தின் எந்த விதமான சுயநிலமான அரசியல் வெளிப்பாட்டினையும் மிகவும் நேறுக்கமாக எதிர்த்தது. சோவியத் மானியங்களும் உற்பத்தி சக்திகளின் தேசியமயமாக்கலும் கியூபாவில் பரந்தளவிலான சமூக சீர்திருத்தத்தினை சாத்தியமாக்கிய அதே வேளையில் காஸ்ட்ரோ ஆட்சி, தீவின் பொருளாதாரம் சீனி வேளாண்மையில் அடியோடு தங்கியிருப்பதை மாற்றியமைப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளை நிராகரித்துவிட்டு, சன்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி, காஸ்ட்ரோவின் கியூபன் கம்யூனிஸ்ட் கட்சி, விபத்துக்குள்ளான கிறனடா நியூ ஜுவல் இயக்கங்களுடன் சேர்ந்து — ஆட்சியில் உள்ள பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் மட்டத்தில் நிஜ கம்யூனிசத்திற்கு புத்துயிரூட்டியுள்ளதாகப் பிரகடனம் செய்தது.

ஆர்ஜன்ரைன மொரினோவாதிகள் சன்டினிஸ்டாக்களின் தலைமையிலான புரட்சியின் கடைசி நாட்களில் முதலாளித்துவ தேசியவாதத்துக்கு தமது முழு அடிபணிவினை அம்பலப்படுத்துவதாக அமைந்த அந்த பெயரிலேயே சைமன் பொலிவார் பிரிகேட்டினை அணிதிரட்டினர் சோமோசாவின் வீழ்ச்சிக்கு ஒருசில நாட்களுக்கு முன்னதாக நிகரகுவாவினுள் நுழைந்த இப்படை பின்னர் சன்டினிஸ்டாக்களால் துப்பாக்கி முனையில் நிகரகுவாவில் இருந்து துரத்தி அடிக்கப்பட்டது. அவர்களின் 'கொரியோ இன்டர்நஷனரின் 1989 ஜனவரி இதழில் மொரினோவாதிகள் இன்னமும் 'இந்த ஒன்பது ஆண்டுகளும், ஒருபுறத்தில் காட்டுமிராண்டி ஏகாதிபத்திய நெருக்குவாரங்களின் சூட்டினாலும் மறுபுறத்தில் வெகுஜனங்களின் நெருக்குவாரத்தினாலும் சன்டினிஸ்டா தலைமை தனது நோக்கங்களுக்கு அப்பால்—முதலாளித்துவத்தினையும் ஏகாதிபத்தியத்தினையும் ஒழிக்க — செல்ல தள்ளப்படும் என்ற சாத்தியத்தினை எமது பிரவாசம் கொண்டிருந்தது.'' என்றது.

மொரினோவாத போக்கு, குட்டி முதலாளித்துவ தேசியவாதத்துக்கு பப்லோவாத அடிபணிவுக்கு ஒரு 'இடது' தோற்றம் வழங்குவதில் நிபுணத்துவம் பெற்றது. கியூபாவினை ஒரு 'தொழிலாளர் அரசு' எனப் பிரகடனம் செய்வதில் ஏனைய பப்லோவாத குழுக்களுடன் சேர்ந்த இது சன்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணியின் குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளை வாயளவில் கண்டித்த அதே வேளையில் 'கியூபன் மாதிரியைப் பின்பற்றும்படி' அழைப்பு விடுத்தது.

நான்காம் அகிலத்துக்கு எதிரான பப்லோவாத திரிபுவாத தாக்குதலின் இதயத்தில் அடிப்படை மார்க்சிச கருத்துப்பாட்டினை—ஒரு மார்க்சிச பாட்டாளிவர்க்கக் கட்சியின் தலையீட்டின் ஊடாக அதன் வரலாற்றுப் பணியினையிட்டு நனவூட்டப்பட்டு, ஒரு பரந்த பாட்டாளி வர்க்க இயக்கத்தின் புரட்சிகர ஆரம்பிப்பின் ஊடாக மட்டுமே சோசலிசத்தினை அடைய முடியும் என்பதை நிராகரிப்பது விளங்கியது. இந்த திரிபுவாதப் போக்குக்கள் இடைவிடாமல் ஸ்டாலினிசம், குட்டி முதலாளித்துவம் ஊடாகவும் சோசலிசத்தினை அடைய வேறு பாதைகளைக் கண்டனர். இவை அனைத்துமே மூட்டுச் சுவர் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டன.

## அனைத்துலகக் குழு

நிகரகுவாவில் இடம்பெற்றுள்ள அபிவிருத்திகள் 1953ல் ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் அதன் குட்டி முதலாளி வர்க்க ஏஜன்சிகளுக்கும் பப்லோவாத திரிபுவாதத்தின் அடிபணிவுக்கும் எதிராக அனைத்துலகக் குழு நடாத்திய போராட்டத்தின் தீர்க்கமான முக்கியத்துவத்தினைக் கோடிட்டுக் காட்டியுள்ளது ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு ஒரு புரட்சிகர பாத்திரத்தினை கற்பிப்பதுடன் கூடிய பப்லோவாத கலைப்பு வாதத்தின் இந்த அம்சம், யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய தீர்வுகளுக்கான அடிபணிவினை பிரதிநிதித்துவம் செய்தது. குறிப்பாக இது பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்திய கொள்கைகளுக்கான அடிபணிவாக விளங்கியது. ஜனநாயக தேசியப் போராட்டத்தில் எந்தவொரு அடிப்படைப் பணிகளையும் ஈட்டிக்கொள்ளாத தேசிய முதலாளி வர்க்கத்துக்கு ஒரு போலி சுதந்திரத்தினை கற்பிப்பதன் மூலம் பாட்டாளி வர்க்கப் புரட்சியை தட்டிக் கழிக்க முயன்றது.

1963ல் மண்டேல் தலைமையில் பப்லோவாதிகளும் ஜோசப் ஹன்சன் தலைமையில் சோசலிசத் தொழிலாளர் கட்சியும், கியூபாவை ஒரு தொழிலாளர் அரசாக வரைவிலக்கணம் செய்தல், தொழிலாள வர்க்கத்தின் ஜனநாயக முன்னணிப்படையாக ஒரு மார்க்சிச பாட்டாளி வர்க்கக் கட்சிக்குப் பதிலீடாக காஸ்ட்ரோவின் குட்டி முதலாளி வர்க்க கொல்லாவாதத்தினை முன்வைத்தல் என்ற உடன்பாட்டின் அடிப்படையில் மீண்டும் ஐக்கியப்பட்டன. இந்த பப்லோவாத கலைப்புவாதத்தின் எதிர்ப்புரட்சிப் பண்ணுவது லத்தீன் அமெரிக்கத் தொழிலாளர் வர்க்கத்தின் இரத்தத்தினால் பொறிக்கப்பட்டது. அங்கு இது ட்ரொட்ஸ்கிசக் கட்சிகளை கலைத்து, 1970வதுகளில் பேராபத்தான தோல்விகளுக்கு வழிவகுத்துக் கொடுத்தது.

யுத்தத்தின் பின்னைய ஒழுங்குமுறையின் சரிவானது நான்கு தசாப்தங்களுக்கு மேலாக பப்லோவாத திரிபுவாதம் சார்ந்திருந்த அரசியல் புனைகதைகளை திட்டவட்டமாக உரிந்து காட்டியது. 'உருக்குலைந்த தொழிலாளர் அரசுகளின் நூற்றாண்டுகள்' பற்றிய தீர்க்க தரிசனங்கள் எங்ஙனம் கிழக்கு ஐரோப்பிய புரட்சிகர நெருக்கடியினால் வெடித்துச் சிதறியதோ அங்ஙனமே அதன் குட்டி முதலாளித்துவ தேசியவாதத்துக்கான வக்காலத்தும் நிகரகுவாவில் அம்பலமாக்கப்பட்டது.

சன்டினிஸ்டா திடீர் மாற்றமானது, தொழிலாள வர்க்கம் வேண்டிநிற்கும் உலக சோசலிசப் புரட்சிக் கட்சியை கட்டி எழுப்பும் சவாலுக்கு முகம் கொடுக்கும் பொருட்டு திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் படிப்பினைகளை மீண்டும் ஒரு தடவை உள்ளீர்க்க வேண்டியதன் அவசியத்தினைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

நிகரகுவா தொழிலாளர்களோ அல்லது மத்திய அமெரிக்க பூராவும் உள்ள தொழிலாளர்களோ அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் எதிர்ப்புரட்சி சக்திகள் மீண்டும் ஆட்சிக்கு வருவதையோ அல்லது 1979 புரட்சிமூலம் வென்றெடுக்கப்பட்ட தேட்டங்கள் துடைத்துக் கட்டப்படுவதையோ அங்கீகரிக்க முடியாது. அவர்கள் தேசியமயமாக்கப்பட்ட கைத்தொழில்கள் விற்பனை செய்யப்படுவதையோ அல்லது நிலம் சோமோசா நிலச்சுவந்தார்களுக்கு திரும்ப கையளிக்கப்படுவதையோ அனுமதிக்க முடியாது.

சன்டினிஸ்டா காட்டிக் கொடுப்பினால் வழிவகுக்கப்பட்ட எதிர்ப்புரட்சி அச்சுறுத்தல்களுக்கு தாக்கிப் பிடிக்க தொழிலாள வர்க்கம் நிகரகுவா முதலாளி வர்க்கத்தினை ஒழித்து பக்டரிகள், கடைகள், நிலங்களை தொழிலாளர் — விவசாயிகளின் கட்டுப்பாட்டில் கொணர்ந்து புரட்சியினை மத்திய அமெரிக்க ஒடுக்கப்படும் மக்களுக்கும் அனைத்துலகுக்கும் விஸ்தரிக்கும் ஒரு புரட்சிகர சோசலிச வேலைத்திட்டத்தினை வேண்டி நிற்கின்றது.

## அமெரிக்க தொழிலாள வர்க்கம்

மனாகுவாவில் உள்ள வாஷிங்டன் கைப்பொம்மைகளுக்கு திட்டமிடப்பட்ட ஆட்சி கைமாற்றத்தின் விளைவாக நிகரகுவா, மத்திய அமெரிக்க வெகுஜனங்களுக்கு உருவாகக் கூடிய பாரிய ஆபத்தினை கவனத்தில் கொண்டு வேர்க்கஸ் லீக், ஏகாதிபத்திய தலையீட்டுக்கு எதிராக நிகரகுவாவை காக்குமாறு அமெரிக்க தொழிலாள வர்க்கத்தினை வேண்டுகின்றது. இப்பிராந்தியத்தில் இருந்து அமெரிக்கப் படைகளை உடனடியாகத் திருப்பியழைக்கும் படியும் சோசலிசப் புரட்சியின் வாயிலாக பொது எதிரியான யங்கி ஏகாதிபத்தியத்தினை தோற்கடிக்கும் பொருட்டு தெற்கு, மத்திய, வட அமெரிக்க தொழிலாள வர்க்க ஐக்கியத்தினையும் சோர வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இது ஏ. எப். எல் — சீ. ஐ. ஓ. அதிகாரத்துவத்தின் துரோகிகளுக்கு எதிரான போராட்டத்தினை இரண்டு மடங்காக்க வேண்டும். உள்நாட்டில் சகல தொழிலாள வர்க்கப் போராட்டங்களையும் காட்டிக் கொடுத்துவரும் அதே சமயத்தில் இவர்கள் சர்வதேச சுதந்திர தொழிலாளர் அபிவிருத்தி (எஐஎப்எல்டீ) போன்ற சீ. ஐ. ஏ 'லேபர் முன்னணி அமைப்புக்கள்' ஊடாக மத்திய அமெரிக்காவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பெறுமதி வாய்ந்த இரத்தம் தோய்ந்த அதிகார பங்காளிகளாக விளங்கியுள்ளனர். அமெரிக்கத் தொழிலாளர்கள் இந்த ஏகாதிபத்திய கைக்கூலிகளை தொழிற்சங்கங்களில் இருந்து வெளியேற்றி அமெரிக்க தொழிலாளர்களை லத்தீன் அமெரிக்காவிலும் அனைத்துலகிலும் உள்ள அவர்களின் வர்க்க சகோதரர்களுடன் ஐக்கியப்படுத்த சபதம் பூண்ட ஒரு புரட்சிகர அனைத்துலக தலைமையினால் பதிலீடு செய்யப்படவேண்டும்.

மிகவும் அவசரமான பிரச்சினை, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தினை நிலைநாட்டுவதன் மூலம் ஜனநாயகப் புரட்சியின் பூரணத்துவம் செய்யப்படாத பணிகளை அமுல் செய்ய ட்ரொட்ஸ்கிச நிரந்தரப் புரட்சி முன்நோக்கின் அடிப்படையில் போராடுவதன் மூலம் லத்தீன் அமெரிக்கத் தொழிலாளர்களை முழுமையாக நிகரகுவா தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியப்படுத்தும் ஒரு சுயாதீனமான புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்புவதேயாகும்.

1990 மார்ச் 8

## இந்திய படைகள் வாபஸ் ..

( -ம் பக்கத் தொடர்ச்சி )

பின்வருமாறு குறிப்பிட்டது ''பிறபோக்கு பிரமதாச அரசாங்கம் தமிழ் தேசிய இனத்தினரின் மேல் ஒடுக்கு முறையின் புதிய திட்டத்தினை திணிக்கவும், வடக்கு கிழக்கிலும் இலங்கையிலும் தொழிலாளி - ஒடுக்கப்படும் மக்கள் மீது காட்டுமிராண்டித் தனமான தாக்குதலைத் தொடுப்பதற்கான நிலைமையை தயார் செய்யவுமே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளது'' என்றது. அது பிரேமதாசவின் நடிப்பினைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'யூ. என். பி. தலைவர்களும் அவர்களது ஏஜன்டுகளும் இந்தப் பேச்சு வார்த்தைகளின் பின்னணியில் உள்ள தமது இரத்தம் சிந்தும் இலக்குகளை 'சமாதான சில்' ஆடையினால் மூடி மறைக்க முயல்கின்றனர். தமிழர் விரோத எல்லையை கிளறி விட்டு இரத்த ஆற்றின் ஊடாக தமது வர்க்க ஆட்சியை நிலைநிறுத்தி வந்த சிங்கள முதலாளி வர்க்கத்தின் இன்றைய பிரேமதாச அரசாங்கம் இன்று அதைப்பற்றி ஏதும் அறியாதது போல் தமிழ் தேசிய இனத்தின் 'கஷ்ட நஷ்டங்களை' அறியத்தரும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையைக் கேட்டுள்ளது விடுதலைப் புலிகள் இன்றைய ஆட்சியாளர்களுக்கு முத்திரை வழங்கும் துரோகப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

''இரு சாராரையும் பேச்சு வார்த்தை மேசைக்கு தள்ளியுள்ளவை வேறு எவையும் அல்ல. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு புத்துணர்வூட்டி வட—கிழக்கு மாகாண தமிழ் தொழிலாளர்களதும் இலங்கைத் தொழிலாளர்களதும் ஒன்றுபட்ட போராட்டம் வெடிப்பதும், ஒடுக்கப்படும் மக்கள் அதைச் சூழ அணிதிரளும் புரட்சிக்கு முன்னோடியான நிலைமை வளர்ச்சி கண்டு வருவதும் இவ்விரு சாராருக்கும் பெரும் பீதியை உண்டு பண்ணியுள்ளது''

(தொழிலாளர் பாதை — 8-9-89)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலக வங்கி தாக்குதல்களுக்கெதிராக எலுதலுவ தோட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

யூ. என். பீ. அரசாங்கம் தோட்டப்பகுதியில் நடைமுறைபடுத்தும் பிற்போக்கு உலக வங்கி தாக்குதல்களுக்கெதிராக பதுளை எலதலுவ தோட்ட தொழிலாளர் மார்ச் 5ம் திகதி ஒருநாள் வேலை நிறுத்தம் செய்து நிர்வாகத்திற்கு சவால் விடுத்தனர்.

இப்பிற்போக்கு வேலைத்திட்டத்தின்படி பல தோட்டங்களை ஒன்று சேர்த்து 'கொத்தணி தோட்டங்கள்' நிறுவப்பட்டுள்ளதோடு கொத்தணித் தோட்டங்களின் தொழிலாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் தோட்டங்களிலேயே வேலை கிடைக்காது அதற்கு பதில க பல மைல்களுக்கப்பாலுள்ள தோட்டங்களில் வேலை செய்ய நேரிடும் அவர்கள் பல மைல்கள் நடந்து போக வேண்டியுள்ளது. மறுபுறத்தில் வேலைத் துரிதப்படுத்தல் நடைமுறை செய்யப்பட்டுள்ளது. ஒரு நாளில் செய்து முடிக்க முடியாத தொகை வேலையை சுமத்தி சம்பளம் அரையாய் குறைக்கப்படும்

சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கம், இ. தொ. கா, ஜ தொ. கா மற்றும் யூஎன்பீ தொழிற்சங்கத்தினதும் சகல தொழிலாளர்களும் மார்ச் 5ம் திகதி வேலை நிறுத்தம் செய்தது இப்பிரதான இருதாக்குதல்களுக்கெதிராகவேயாகும்.

இவ்வேலை நிறுத்தத்தால் நெருக்கடியில் தள்ளப்பட்ட தோட்ட நிர்வாகிகளால் கூட்டப்பட்ட பேச்சுவார்த்தையில் பங்கெடுத்த தொழிற்சங்க தலைமைகள் பதுளை தொழிலாளர் காரியாலயத்தின் உத்தியோகத்தர்களுடனும் தோட்ட நிர்வாகிகளுடனும் சமரசமாகி அத்தினமே வேலை நிறுத்தத்தை நிறுத்திவிட்டனர்

தொழிலாளரை வெகுதூரமான தோட்டங்களுக்கு அனுப்புவதை நிறுத்துவதற்கும், வேலை நாளை அரையாக வெட்டுவதை நிறுத்துவதற்கும் நிர்வாகிகள் இணங்கியதாக சங்க தலைவர்கள் அறிவித்தார்கள். ஆனால் இச்சமரசத்தின் மூலம் உலக வங்கியின் திட்டங்கள் ஸ்தம்பிதமடையபோவதில்லை,

உலக வங்கியின் ஆணையின்படி தோட்டப்பகுதியில் வேலை வாய்ப்புகள் சரிபாதியை நாசப்படுத்த யூஎன்பீ அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆயிரக்கணக்கான ஏக்கர்களை கொண்ட தோட்டங்களை தனியார் துறைக்கு வழங்க முதலாளித்துவ யூஎன்பீ அரசாங்கம் தற்பொழுது இயங்கி வருகிறது. கொடுப்பனவுகளையும், கிழமையின் வேலை நாட்களையும் வெட்ட அது ஆயுத்தமாகிறது.

யூஎன்பீ அரசாங்கத்தின் அமைச்சரான இ. தொ. கா தலைவர் தொண்டமானும், சமசமாஜ, கம்யூனிஸ்ட், ஜ தோ. கா. தலைவர்களும் தொழிலாளரை முதலாளித்துவ யூஎன்பீயின் இத்தாக்குதல்களுக்கு ஆளாக்க இடம் வகுக்கின்றனர். இதற்கு புறம்பாக முதலாளித்துவத்திற்கும் அதன் தாக்குதல்களுக்கும் எதிராக போராட ஓர் புரட்சிகர வேலைத்திட்டத்தை முன்வைப்பது புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமேயாகும்.

உலக வங்கியினதும் யூஎன்பீ அரசாங்கத்தினதும் தாக்குதல்களுக்கெதிராக ஒரு பொது வேலை நிறுத்தத்தை ஆயுத்தப்படுத்த புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் பிரச்சாரம் செய்கின்றது. பொது வேலை நிறுத்தத்திற்கான தீர்மானமெடுக்க தொழிற்சங்க பிரதிநிதிகளின் மகாநாட்டை கூட்டுவதற்கு பு. க. க. போராடுகின்றது. தோட்டத்தொழிலாளர்கள் தமது சங்கங்களினுள் இவ்வேலைத்திட்டத்திற்கு போராடியவாறு பு. க. க,வின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும்.

தொண்டமான்—செல்லச்சாமி யூஎன்பீ அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டுமெனவும், சமசமாஜ,கம்யூனிஸ்ட் நவ சமசமாஜ தலைவர்கள் சி. ல. சு. கட்சியுடனும் சி ல. மக்கள் கட்சியுடனும் முன்னெடுத்து செல்லும் மக்கள் முன்னணியை தகர்க்குமாறும், உலக வங்கி வேலைத்திட்டத்திற்கெதிராகவும் யூஎன்பீ அரசாங்கத்தை வெளியேற்றவும் பொது வேலை நிறுத்தத்தை ஆயுத்தப்படுத்த வற்புறுத்தும் படி தொழிலாளரை வேண்டுகின்றோம்.

உலக வங்கி வேலைத்திட்டத்திற்கும் யூஎன்பீ அரசாங்கத்திற்கும் எதிராக போராட தொழிலாளரை அணிதிரட்டாத தலைமைகளை வெளியேற்றி சோஷலிச வேலைத்திட்டத்திற்கும், தொழிலாளர்—விவசாய அரசாங்கத்திற்கும் போராடும் புரட்சிகர தலைமையை கட்டியெழுப்ப புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தில் சேரும்படி வேண்டுகிறோம்.

( 1ம் பக்கத் தொடர்ச்சி )

# பதுளை கிளென் அல்பைன் . . .

நாள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் காமினி திசாநாயக்கா வெளிப்படுத்துகையில் ' தோட்டத்துறையில் மேலதிகமானவற்றையும் மேலதிக மனிதவளத்தினையும் நாசமாக்கி விடுவதற்கான காலம் வந்து விட்டது ' எனக் குறிப்பிட்டார்.

உலகச் சந்தையில் ஒரு கிலோ தேயிலைக்கு ரூபா 49 கிடைக்கையில் உற்பத்திச் செலவு 51/2 ஆக உள்ளது உற்பத்திச் செலவில் சுமார் 70 வீதம் சம்பளத்துக்காகச் செலவாகின்றது. எனக் கூறி உலக வங்கித் தாக்குதல்களுக்கு தொழிலாளவர்க்கத்தினை கீழ்ப்படுத்தும் கடைகெட்ட தாக்குதலில் பெருந்தோட்டத் கைத்தொழில் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

உலக வங்கித் திட்டத்தின்படி ஒரு தோட்டப் பக்டரியைச் சுற்றிப் பல தோட்டங்களை இணைக்கும் கொத்தணி தோட்ட முறையும் அன்பர 'உபரி' பக்டரிகளை மூடுவதும் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது.

இத்திட்டங்களை அமுல் செய்கையில் தொழிலாளர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பிற்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்பதை அரசு நன்கு அறியும் எனவே தான் சமசமாஜ — கம்யூனிச — இ தொ. கா நவ சமசமாஜ மற்றும் தொழிற் சங்கத் தலைவர்களின் துரோக ஆதரவுகளோடு யூ. என். பி. அரசாங்கம் முக்கிய தேயிலை நகரங்களான ஹட்டன், தலவாக்கலை, பஸ்ஸலியா, பதுளை முதலான இடங்களில் இராணுவ முகாம்களை திணிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

யூ. என். பி. அரசாங்கத்தின் அடக்கு முறைக்கும் பாசிச பக்கள் விடுதலை முன்னணியின் பயங்கரங்களுக்கும் மத்தியிலும் தோட்டங்களிலும், நகர்ப்புறங்களில் தொழிலாளர்கள் போராட்டங்கள் மீண்டும்' மீண்டும் வளர்ச்சி கண்டன. 198 ல் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி பிரேமதாச மக்கள் விடுதலை முன்னணித்தலைவர்களை அரசாங்கத்தில் சேர்த்துக் கொண்டு அவர்களின் கொலைகாரக் கும்பல்களை அரசாங்கப் படைகளுடன் ஒன்றிணைத்து தமது தலைமையின் கீழ் எடுக்க செய்யாத முயற்சியே இல்லை. துரோகத் தலைவர்களின் உதவியுடன் பின்னணிக்குத் தள்ளப்பட்ட தொழிலாள வர்க்கப்போராட்டம், இன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள உலக வங்கித் தாக்குதல்களின் புதிய சுற்றுடன் பிரமாண்டமான அளவில் வெடித்தக் கிளம்பும் என ஆளும் வர்க்கம் அஞ்சுகின்றது.

தியனகல டிவிசன் தாக்குதல் இப்போராட்டம் வெடிப்பதற்கு முன்னரே தொழிலாள வர்க்கத்தினை சிதறடிக்கும் ஆளும் வர்க்கத்தின் திட்டத்தின் ஒரு பாகமாகவே இடம் பெற்றுள்ளது இது துப்பாக்கிச் சூட்டின் பின்னர் தோட்டத்துக்கு வந்த இராணுவ அதிகாரி குறிப்பிட்ட 'இரண்டு சாராரிலும் தவறு உண்டு' என்பதை ஏற்றுக் கொள்ளும் பிரச்சினை அன்று.

தோட்டங்களில் அமைக்கப் பட்டுள்ள இராணுவப் படைப் பிரிவுகளும், பொலிசாரும் தொழிலாளர்களுக்கு எதிரான இடைவிடாத ஆத்திர மூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இது இந்த மோதுதல்களுக்கான நிலைமைகளை சிருஷ்டிப்பதே. இதற்கு முன்னர் சம்பியன் தோட்டத் தொழிலாளர்கள் பொலிசாரின் ஆத்திர மூட்டல் நடவடிக்கைகளுக்கு எதிராக கடந்த ஜனவரியில் பலத்த பிரச்சாரத்தில் ஈடுபட்டது தெரிந்ததே.

யூ. என். பி. அரசாங்கத்தின் இறையை இராணுவ சர்வாதிகாரத்தின் எதிரில் தோட்டப்புற, நகர்ப்புற தொழிலாளர் இயக்கத்தினை நிராயுதபாணியாக்கும் தலைமைகளுக்கு எதிராக வர்க்க தோழமையின் அடிப்படையில் தொழிலாளர் இயக்கத்தினை பாதுகாக்கும் வேலைத்திட்டத்துக்கும், உலக வங்கி—யூ. என். பி. சதிக்கும் எதிராக பொது வேலைநிறுத்தத்துக்கு தயார் செய்யவும். யூ. என். பியை வெளியேற்றி தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை கட்டி எழுப்பும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரளுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது:

- ★ தொண்டமான் — செல்லச்சாமி தலைமையை யூ, என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறக் கோரு!
- ★ தொழிலாள வர்க்க ஐக்கிய முன்னணியையும் பாதுகாப்பு படை அணிகளையும் நடவடிக்கை குழுக்களையும் அமை!
- ★ உலக வங்கி - யூ. என். பி. தயாரிப்புக்கு எதிராக பொது வேலை நிறுத்தத்துக்கு தயார் செய்!
- ★ தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவு!
- ★ புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தைப் புரட்சிக் கட்சியாக பரிணமம் செய்!

# இந்திய படைகளை . . (7ம் பக்க தொடர்ச்சி)

இந்திய 'ஜனநாயகம்' பற்றிய பிரபாகரனின் கண்டுபிடிப்பு(1987) அப்பாவித்தனத்திற்கு நல்லதோர் உதாரணம் எனக் குறிப்பிட்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு தனது இந்திய – இலங்கை உடன்படிக்கையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும் என்ற அறிக்கையில் விடுதலைப் புலிகளின் தவறையும். பாட்டாளி வர்க்கத்தின் பொறுப்பையும் சுட்டிக்காட்டுகையில்;

''11. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தவறு தேசிய சுய நிர்ணயத்துக்கான கோரிக்கையினை மதிப்பிழக்கச்செய்யவோ அல்லது அத்தகைய ஒரு போராட்டத்தினை உதவாக்கரையான தாக்கி விடவோ இல்லை. மாறாக அது தேசிய ஜனநாயக இயக்கத்தின் தலைவிதி ஒடுக்கப்படும் நாட்டின் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்துடன் பிணையுண்டு போயுள்ளதையும் மீண்டும் காட்டுகின்றது.

''ஜனநாயக இயக்கத்தின் தீர்வு காணப்படாத ஏனைய சகல பணிகளைப் போன்றே தேசிய சுயநிர்ணயமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலம் மட்டுமே அடைய முடியும். உண்மையில் நான்காம் அகிலத்தின் இந்த வரலாற்று முன்நோக்கு, கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை சிங்கள — தமிழ்வெகு ஜனங்களின் அனுபவங்களின் மூலம் துலக்கமான முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது கடந்த கால் நூற்றாண்டாகப் பப்லோவாத திரிபுவாதிகளின் அங்கீகாரத்துடன் சமசமாஜ கட்சியினர் இழைத்த சொல்லில் அடங்காத காட்டிக் கொடுப்புக்கள் இல்லையேல் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்துக்கும் இடையே ஒருபோதும் முறிவு ஏற்பட்டிராது. உண்மையில் 1964ல் சமசமாஜக் கட்சி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்தினுள் நுழைந்தமை வர்க்கப் போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டம் இரண்டினதும் அபிவிருத்தியில் ஒரு வரலாற்று நீர் மேடாக விளங்கிற்று. இந்த வரலாற்று காட்டிக் கொடுப்புக்கு முன்னர் தமிழ் வெகுஜனங்கள் தொழிலாள வர்க்கத்திடமிருந்து தலைமையை எதிர்பார்த்ததோடு பாட்டாளி வர்க்கம் இலங்கை முதலாளி வர்க்கத்தை தூக்கி வீசியதும் தேசிய ஒடுக்குமுறை நீக்கப்பட்டு விடும் என நம்பியிருந்தது. இது 1953 ஹர்த்தால் மூலமும், 1963–64ம் ஆண்டின் 21 கோரிக்கைகள் இயக்கத்தின் மூலமும் சட்ட ரீதியில் பிரத்தியட்சம் ஆக்கியது

'சமசமாஜக் கட்சி சிங்கள முதலாளி வர்க்க அரசினைப் பேணிய வகையும் ஒடுக்குமுறையை ஸ்தாபன ரீதியாக்கிய அரசியலமைப்புச் சட்டத்தின் அமுலில் நிசமாகப் பங்கு கொண்டதன் மூலம் 1964–72 இடைப்பட்ட காலத்தில் முழு நிலைமையும் மாற்றம் அடைந்தது சமசமாஜக் கட்சியினால் கைவிடப்பட்ட தமிழ் வெகு ஜனங்கள் புதிய பாதையை தேடியதோடு முதலாளித்துவ தேசியவாத அரசியலினுள்ளும் ஈர்க்கப்பட்டனர்.''

இந்த வரலாற்று பாதையை தமிழ் தேசியக் குழுக்களின் முழுக் காட்டிக்கொடுப்புகளும் துரோகங்களுக்கும் மத்தியில் திரும்பவும் புரட்சிகர தொழிலாளர் கட்சியின் தலைமையில் ஒடுக்கப்படும் மக்களை தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு அணிதிரட்டுவது உடனடிப் பணியாகியுள்ளது. பருத்தித் துறைச் சம்பவம் சுட்டிக் காட்டும் படிப்பினை இதுவே.

இப்பணியினை நிறைவேற்ற நிரந்தரப்புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் தீர்க்கப்படாத ஜனநாயகப் புரட்சியின் பணிகளைத் தீர்க்க தமிழ் ஈழம் — இலங்கை ஐக்கிய சோசலிச அரசுக்காகப் போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை புரட்சிக்கட்சியாக கட்டி எழுப்புங்கள்.

கொழும்பு — 10, 1 – ஆவது மாளிகாகந்தை [illegible] இலக்கம் 90 [illegible] தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51 ஆம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org